Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 வைகாசி 08 வியாழக்கிழமை (22-05-1997) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 175

# வன்னியில் சண்டை தற்காலிக நிறுத்தம்!

## மீண்டும் வியூகம் வகுப்பதில் அரசுப் படைகள் அக்கறை

கொழும்பு, மே 22

வன்னியில் பெருத்த எடுப்பில் இராணுவ நடவடிக்கை ஒன்றைக் கடந்த 13ஆம் திகதி ஆரம்பித்த ஸ்ரீலங்காப் படைகள் ஆறு நாள்களின் பின்பு தமது நடவடிக்கைகளை தற்காலிகமாக நிறுத்தியிருக்கின்றன. கடந்த மூன்று நாள்களாக அங்கு பெரும் படை நகர்வு நடவடிக்கைகள் எதிலும் அரசுப் படைகள் ஈடுபடவில்லை.

நெடுங்கேணியில் நிலைகொண்டுள்ள படையினர்மீது நேற்று முன்தினம் இரவு புலிகள் நடத்திய சிறிய அளவிலான தாக்குதலையும், ஆங்காங்கே சிறு சிறு மோதல்களையும் தவிர வேறு பெரும் சண்டை ஏதும் அங்கு நிகழவில்லை.

தாம் முன்னேறிக் கைப்பற்றிய பிரதேசங்களில் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் படைகள் தொடர்ந்து தமது நிலைகளில் இருந்து தமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட பிரதேசங்களை நோக்கி கடும் ஆட்லறித் தாக்குதலை நேற்றும் மேற்கொண்ட வண்ணம் இருந்தன.

தற்போதைய இராணுவ நடவடிக்கையின் போது

(10 ஆம் பார்க்ம் பார்க்க)

## பிச்சைக்காரர் வேடத்தில்

# அனுருத்தவை பின் தொடர்ந்து நோட்டமிட்டவர் கைது!

யாழ்ப்பாணம், மே 22

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையைப் பின் தொடர்ந்து அவரது நடமாட்டங்களை நோட்டமிட்டு வந்ததாகச் சந்தேகிக்கப்படும் பிச்சைக்காரர் ஒருவரை ''செலுலர்'' தொலைபேசியுடன் கண்டியில் வைத்துப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இவர் கண்டியில் உள்ள ஜனாதிபதியின் மாளிகைக்கு அருகே நடமாடியபோது கண்டி பொலீஸ் அதிரடிப் பிரிவினர் இவரைக் கைது செய்தனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் படையினரை

# கொலைக்களத்துக்குள் புலிகள் இழுக்கின்றனர்

### இராணுவப் பேச்சாளர் கூறுகிறார்

கொழும்பு, மே 22

கொலைக்களம் எனக் கருதப்படும் பகுதிக்குள் படையினரை முன்னேறி வரச் செய்துவிட்டுப் பின்னர் அங்கு வைத்து அவர்களைத் தாக்குவதே விடுதலைப் புலிகளின் கெரில்லா யுத்தியாகும்; எனினும் எத்தகைய நிலைமை

(10 ஆம் பக்கம் பார்க்க)

# படையினரின் வெளிச்சக் கூடுகள்

யாழ். குடாநாட்டில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் 'வெசாக்' பண்டிகையை ஒட்டி தாம் தங்கியுள்ள பிரதேசங்கள் மற்றும் தமது முகாம் பகுதிகளில் பல்வேறு வண்ணங்களில் — அழகுற — தயாரிக்கப்பட்ட வெசாக் வெளிச்சக்கூடுகளை ஆங்காங்கே தொங்கவிட்டிருந்ததை நேற்று காணக்கூடியதாக இருந்தது.

யாழ். நகரப் பகுதிகளில் நேற்று வெசாக் தினத்தை முன்னிட்டு இராணுவத்தினரும் பொலீஸாரும் ஆங்காங்கே மக்களுக்கு குளிர் பானங்கள், சிற்றுண்டிகள், உணவுப் பார்சல்கள் போன்றவற்றை வழங்கினர்.

யாழ். போதனா வைத்திய சாலையிலும் வாட்டுக்களில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கும், சிற்றூழியர்களுக்கும் உணவுப் பார்சல்கள் இராணுவத்தினரால் வழங்கப்பட்டன.

ஆஸ்பத்திரியில் நேற்று உணவு தயாரிக்கும் வேலைகள் நிறுத்தப்பட்டு இராணுவத்தினர் விநியோகித்த உணவுகள் நோயாளருக்கு வழங்கப்பட்டன.

(உ-15-100-135-152)

# கல்வியங்காட்டுச் சம்பவத்தில் பொதுமக்கள் சிலர் காயம்

கல்வியங்காடு இராச வீதியில் இராணுவத்தினரின் டிராக்டர் ஒன்றின் மீது நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் கிரனேட் வீசப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இச் சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததாகவும் மற்றும் இருவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்ட போதிலும் அதனை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

இச் சம்பவத்தின் பின்னர் அப்பகுதியிலிருந்த பொதுமக்கள் அடித்துத் தாக்கப்பட்டதாகவும்—

பத்துக்கு மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் மேலும் கூறப்பட்டது.

காயமுற்ற நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட கந்தையா தெய்வேந்திரம் (வயது 34), மடுத்தீன் டோம்ராஜ் (வயது 32) ஆகிய இருவரும் இத் தாக்குதல்களில் தாங்கள் காயமுற்றதாகத் தெரிவித்தனர்.

(உ-15)

# பிளேயரின் புதிய அரசு இலங்கைக்கு உதவும்

### அரச உயர் அதிகாரி நம்பிக்கை

பிரிட்டனில் ரொனி பிளேயர் பதவியேற்றுள்ள தொழிற்கட்சி அரசு இலங்கைக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்கும் என்று கொழும்பில் உள்ள உயர் அரச அதிகாரி ஒருவர் நம்பிக்கை வெளியிட்டார்.

இலங்கைக்கு எதிராக கடும் நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று பிரிட்டிஷ் அரசை விடுதலைப் புலிகள் தீவிரமாக வற்புறுத்தி வருகின்றனர். ஆனாலும் பிரிட்டன் தொடர்ச்சியாக இலங்கை அரசுக்கு ஆதரவு வழங்கும் என்றும் அவர் கூறினார்.

(ஐ-150-3)

# நெடுங்கேணியில் புலிகள் அதிரடி!

கொழும்பு, மே 22

நெடுங்கேணிப் பகுதியில் முன்னேறி நிலைகொண்டுள்ள படையினர் மீது நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகள் திடீர்த் தாக்குதல் ஒன்றை நடத்தினர். இதில் படையினர் தரப்பில் ஒருவர் உயிரிழந்ததாகவும் மூவர் காயமடைந்ததாகவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

இராணுவத்தினரின் நிலைகள் மீது நடத்தப்பட்ட இந்த அதிரடித் தாக்குதலைத் தொடர்ந்து அப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையே கடும் மோதல் நீண்ட நேரம் இடம் பெற்றதாகவும் —

தாக்குதலை அடுத்துப் படையினர் அங்கிருந்து மக்கள் குடியிருப்பு பகுதிகள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான பேரவை கண்டனம்

கொழும்பு, மே 22

வன்னியில் படையினர் ஆரம்பித்துள்ள இராணுவ நடவடிக்கை குறித்து இலங்கை சமாதானப் பேரவை தனது கவலையையும், கண்டனத்தையும் வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் இடையே இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக அண்மையில் ஏற்பட்ட இணக்கத்தினால் இராணுவ முனைப்பை நிறுத்த முடியாமற்போயுள்ளது. இதன் விளைவாக 'ஜெயசிகுறு' இராணுவ நடவடிக்கையில் பெருமளவு உயிரிழப்புகள் நேர்ந்துள்ளன — என்று இலங்கை சமாதானப் பேரவை தெரிவித்துள்ளது.

(ஐ)

## மணலாறில் சிப்பாய் பலி!

மட்டக்களப்பு, மே 22

வெலிஓயா உதயபுரம் பகுதியில் நேற்று முன்தினமிரவு 9-45 மணியளவில் இராணுவக் காவலரண் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய துப்பாக்கித் தாக்குதலில் இராணுவத் தரப்பில் ஒருவர் உயிரிழந்ததாகவும் மூவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(உ-21)

# ஓமந்தை வியாபாரிகள் வவுனியாவில் நிர்க்கதி

வவுனியா, மே 22

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை ஆரம்பமாவதற்கு முன்னர் ஓமந்தைப் பகுதியில் இருந்து வியாபார நோக்கமாக வவுனியா நகரப் பகுதிக்கு வந்த பல நூற்றுக்கணக்கானவர்கள் திரும்பிச் செல்ல முடியாமல் கடந்த ஒரு வார காலமாக அங்கேயே தங்கியுள்ளனர்.

தமது கைவசம் இருந்த பணம் முடிவடைந்து விட்ட நிலையில் தாம் பெரும் நிர்க்கதிக்குள்ளாகி இருப்பதாக இவர்கள் வவுனியா அரச அதிபர் பணிமனைக்கும் இலங்கைச் செஞ்சிலுவை சங்க வவுனியா கிளைப் பணிமனைக்கும் நேரில் சென்று முறையிட்டனர்.

இவர்கள் அனைவரையும் பஸ் ஒன்றில் ஏற்றிச் சென்று மடுப்பகுதியில் சேர்க்க செஞ்சிலுவை அதிகாரிகள் இராணுவத்தினரின் அனுமதியைக் கோரியிருந்தனர் என்றும்—

ஆனால் வவுனியா மாவட்ட பிரிகேடியர் அதற்கு அனுமதி வழங்க மறுத்து விட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா அரச அதிபர் கொழும்பில் இருந்து திரும்பியதும் இவர்களுக்கும் நிவாரண உதவிகளை வழங்க ஏற்பாடு செய்வதாக வவுனியா செயலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(ஐ-உ-164)

# அம்பாறையில் தாக்குதல் கான்ஸ்டபிள் பலி!

மட்டக்களப்பு, மே 22

அம்பாறைமாவட்டம் பொத்துவில் — பாணமை வீதியில் பாக்கியத்தை என்ற இடத்தில் நேற்று முன்தினம் இரவு 9 30 மணியளவில் விடுதலைப் புலிகள் பதுங்கியிருந்து தாக்கியதில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பலியானார்; மற்றொரு கான்ஸ்டபிள் காயமடைந்தார். அவர்களின் ஆயுதங்களை விடுதலைப்புலிகள் எடுத்துச் சென்றதாக அறிவிக்கப்படுகின்றது.

பொலீஸ் நிலையத்தில் இருந்து பாணமை வீதிக்கு கால் நடையாக ரோந்து சென்ற பொலீஸார்மீதே புலிகள் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது

(உ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நேற்றைய புதிய வெளியீடு
சுரேஸ் - வினிதா நடித்த

**நானும் ஒரு இந்தியன்**
**சிஷ்யா**
**பாண்டியன்**

ஒறிஜினல் வெளியீடு
**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம்.

(47093)


# மரண அறிவித்தல்கள்

## நாகமுத்து மாரிமுத்து

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த நாகமுத்து மாரிமுத்து அவர்கள் 20-05-97 அன்று இரவு காலமானார்.

இவர் கனகசபை (விவசாயப் பண்ணை, இயக்கச்சி), காலஞ்சென்ற சிவஞானம் (தியாகு) மற்றும் பாலசுந்தரம் (பாலா எஞ்சினியர், சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ருக்குமணி மற்றும் சற்குணம், பவளராணி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21-05-97 புதன் கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பாலசுந்தரம் (மகன்)
(பாலா எஞ்சினியர்,
சாவகச்சேரி)

கிராமசபை முன்பாக,
பிறவுண் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(47092)

## திருமதி பத்தினி அம்பிகை குமாரசாமி

சங்கரத்தையைச் சேர்ந்த திருமதி பத்தினி அம்பிகை குமாரசாமி கொழும்பில் காலமானார்.

இவர் இளைப்பாறிய உள்ளூராட்சி சேவை உத்தியோகத்தர் திரு. குமாரசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிறம்பான் நாகலிங்கம் இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற நடராசா (கூட்டுறவுப் பரிசோதகர்), காலஞ்சென்ற சிவராசா (மலேசியா), காலஞ்சென்ற பரமராசா (யாழ். வர்த்தக வங்கி), இளைப்பாறிய ஆசிரியர் சுந்தரராசா (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு கல்கிசை மயானத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
குகன்
(மருமகன்),
சங்கரத்தை
வட்டுக்கோட்டை.

241, Hill St,
Dehiwala.,

(47238)

## பொன்னையா சந்திரசேகரம

(காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபனம்)

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் வல்வெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சந்திரசேகரம் 20-05-97 அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21-05-97 அன்று நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
மனைவி: அன்னம்மா
பிள்ளைகள்: சஜீபா நியூர்னா

''அன்பகம்''
வல்வெட்டி.

(சி/756)

## அடையாள அட்டைகள் விநியோகம்

யாழ்ப்பாணம், மே 22

வண்ணை வடமேற்கு ஜே—99 கிராம அலுவலர் பிரிவுக்குரிய விசேட அடையாள அட்டைகள் நாளை வெள்ளிக்கிழமை காலை முதல் நல்லூர் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

அடையாள அட்டைகள் கிடைக்கப் பெற்றுள்ளவர்களின் பெயர் விவரங்களை ஆறுகால்மடம் பாடசாலை ஒழுங்கையில் உள்ள கிராம அலுவலரின் இல்லத்தில் பார்வையிடலாம். (ஐ)

## ஞானசம்பந்தர் குருபூசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், மே 22

சைவ பரிபாலனசபை ஏற்பாடு செய்துள்ள திருஞானசம்பந்தர் குருபூசை நிகழ்ச்சிகள் நாளை மறுதினம் சனிக்கிழமை மு. ப. 10.00 மணி முதல் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும். (ஐ-5)

## பஸ்ஸில் இருந்து தவறி விழுந்து படுகாயம்

யாழ்ப்பாணம், மே 22

ஓடிக் கொண்டிருந்த பஸ் வண்டியில் இருந்து — அது நிறுத்தப்படுவதற்கு முன்பாகவே— இறங்க முயற்சித்த வேளை, தவறி விழுந்து ஒருவர் படுகாயமடைந்தார்.

சாவகச்சேரி சங்கத்தானையில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த சொக்கலிங்கம் நந்தகுமார் (வயது 23) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

சுயநினைவிழந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் அங்கிருந்து பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஐ-15)


**மாணவர் சப்பாத்துக்கள்**

கொரிய தொழில் நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட மாணவர்களுக்கான சப்பாத்துக்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

**சாவா**
**விற்பனை நிலையம்,**
**வதனி மருந்தகம்**
பஸ்நிலைய வீதி,
சாவகச்சேரி.

(சி/760)



உ

**மங்களகரமான திறப்புவிழா**

யாழ். நகரில் இன்று (22-05-97) வியாழக்கிழமை காலை 7-35 — 9-25 வரை உள்ள சுபமுகூர்த்தத்தில் மீண்டும் கதிரவன் உதயமாகின்றான்.

புதிய பாணியில் பைக்கற் செய்யப்பட்ட
★ மளிகைப் பொருள்கள் ★ பிஸ்கட் வகைகள்
★ குளிர்பான வகைகள் ★ கேக், மிக்சர் வகைகள்
மற்றும் குளிர்பானம், கேக் தயாரிக்கும் சகல பொருள்களும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்:

**கதிரவன் ரேட் சென்ரர்**
**144, நவீன சந்தை,**
**ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

யாழ். வர்த்தக சங்கச் செயலாளர் திரு. சி.நமசிவாயம் அவர்களால் மங்களவிளக்கேற்றி ஆரம்பித்து வைக்கப்படும்.

பங்காளர் சி. குணம்

(47236)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி வள்ளிப்பிள்ளை சுப்பிரமணியம்

யாழ்ப்பாணம் விழிசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் இரணை இலுப்பங்குளத்தில் வசித்தவருமாகிய திருமதி வள்ளிப்பிள்ளை சுப்பிரமணியம் 11-05-1997 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. திருமதி இளையகுட்டி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலும் மயிலுவின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், தடாதகைப் பிராட்டி, சரவணபவன் B. A Hons-(ஆசிரியர், வவுனியா தமிழ் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், வேலாயுதபிள்ளை (உரிமையாளர், ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ், கல்முனை), நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும் செந்தில்குமரன், செவ்வேட்குமரன், சுகிர்தன், சுதாகர், நிலாணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இரணை இலுப்பங்குளம் மயானத்தில் 12-05-97 இல் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
சு. சரவணபவன்
(மகன்)

(47235)

## வேலுப்பிள்ளை அன்னபூரணம்

காரைநகர் வளப்போடை, களபூமியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை அன்னபூரணம் நேற்று (21-05-97) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் (மலாயன் பென்சனியர்) அன்பு மனைவியும், திலகவதி, திருநாவுக்கரசு (லண்டன்), காலஞ்சென்ற புனிதவதி மற்றும் வீரசிங்கம் (மருந்தாளர்), புவனேஸ்வரி, காலஞ்சென்ற உமாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், அன்னபாக்கியம், பரமேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் சிறிய தாயாரும், க. சுப்பிரமணியம், ராணி, புவனேஸ்வரி (விவசாயத் திணைக்களம்), கா. சுப்பிரமணியம், ஆ. சுப்பிரமணியம், க. பரமசிவம், பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற நாகரெத்தினம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் இன்று (22-05-97) வியாழக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு காரைநகர் தில்லை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
வே. வீரசிங்கம்
(மகன்)

வளப்போடை,
களபூமி, காரைநகர்.

(47094)


**மீண்டும்!** **விரைவில்!**

உங்கள் அபிமான வார இதழ்

**சஞ்சீவி**

(புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்)

எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஆக்க இலக்கிய கர்த்தாக்கள் சஞ்சீவிக்கான தங்கள் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் மற்றும் ஆக்கங்களை

'பிரதம ஆசிரியர், உதயன் சஞ்சீவி 361 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு அனுப்பலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலிபான் படையினர் பலம் ஆப்கானில் ஓங்குகிறது

## ஜெனரல் டொஸ்தமின் முன்னணி அரண் வீழ்ச்சி

ஆப்கானிஸ்தானின் வட மேற்குப் பகுதியில் உள்ள பார்கிஸ் மாகாணத்தில் நடைபெறும் சண்டையில் ஜெனரல் டொஸ்தமின் கூட்டுப் படைகளின் முன்னணி அரண்கள் வீழ்ச்சி அடைந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அப்துல்மாலிக் தலைலமயிலான டொஸ்தம் எதிர்ப்புக் கலகப்படைகளுடன் தலிபான் படைகள் இணைந்துகொண்டன என்றும்.

டொஸ்தம் தலைமையிலான கூட்டுப் படைகளைச் சரணடையுமாறும் தலிபான் படைகளின் தலைவர் முல்லா முகமது லுமார் அறிவித்துள்ளார்.

ஆரம்பத்தில் ஜெனரல் டொஸ்தமுக்கு ஆதரவாகச் செயற்பட்ட வடமேற்குப் பகுதியில் உள்ள பார்கிஸ் மாகாண அதிகாரிகள் கடைசி நேரத்தில் தலிபான் படைகளுடன் சேர்ந்து கொண்டார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு ஆப்கானிஸ்தானின் 'யுத்த பிரபு' என அழைக்கப்படும் ஜெனரல் டொஸ்தம் தமது படைகளைப் பெரும் எதிர்த் தாக்குதல் ஒன்றுக்குப் பலப்படுத்தி வருவதாக பி. பி. சி. நேற்றுத் தெரிவித்தது. (இ)

## அலங்கார ஊர்தியில் மின் பாய்ந்தது!

### 16 பேர் பலி! 40 பேர் காயம்!!

புதுடில்லி, மே 22

ராஜஸ்தான் மாநிலத்தில் முஸ்லிம்களின் முஹரம் பண்டிகையை ஒட்டி நடைபெற்ற ஊர்வலத்தின் போது மின் தாக்கியதில் 16பேர் பலியாகினர்: 40பேர் காயமடைந்தனர்.

இந்த மத ஊர்வலத்தில் சென்று கொண்டிருந்த அலங்கார ஊர்தி ஒன்று அதிவலுவுள்ள மின் விநியோக கம்பி ஒன்றில் மோதியதால் ஊர்தியில் மின் பாய்ந்தது. அதிலிருந்த 16 பேர் அவ்விடத்திலேயே பலியாகினர். அருகில் நின்றவர்கள் உட்பட, 40 பேர் எரிகாயங்களுக்குள்ளாகினர்.

இந்தியப் பிரதமர் இந்தர்குமார் குஜ்ரால் இச் சம்பவம் குறித்து தனது அதிர்ச்சியையும், கவலையையும் வெளியிட்டுள்ளார். (ஐ)

## பாப்பரசர் கியூபா செல்வார்

வத்திக்கான், மே 22

புனித பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் அடுத்த ஆண்டு ஜனவரியில் கியூபாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

பாப்பரசரின் இந்த விஜயம் தொடர்பான ஏற்பாடுகளைக் கவனிக்க வத்திக்கான் பிரதிநிதி ஒருவர் நேற்று கியூபா போய்ச் சேர்ந்தார். (ஐ)

## கடாபி மீது ஐ. நா. குற்றச்சாட்டு

லிபியத் தலைவர் கடாபி இம்மாதம் நைகருக்கும், நைஜீரியாவுக்கும் மேற்கொண்ட விஜயம் அவர் சர்வதேசப் படைகளை மீறிச் செயற்படும் ஒரு நடவடிக்கை என்று ஐ. நா. பாதுகாப்புச் சபை குற்றஞ் சாட்டியுள்ளது. (ஐ)

# மியான்மர் அரசு மீது அமெரிக்கா தடைகள்

வாஷிங்டன், மே 22

மியான்மர் (பர்மா) நாட்டு இராணுவ அரசுமீது அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் பொருளாதாரத் தடை விதித்துள்ளார்.

மியான்மர் நாட்டு எண்ணெய்வள மேம்பாட்டில் அமெரிக்கர்கள் முதலீடு செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான தனது அறிவிப்பை ஜனாதிபதி கிளின்ரன் நாடாளுமன்றத்துக்கு அனுப்பியுள்ளார்.

மியான்மர் அரசு அரசியல் எதிர்ப்பாளர்களை வஞ்சம் தீர்ப்பதை கண்டித்தே அமெரிக்கா இத்தடையை விதித்துள்ளது.

மியான்மர் அரசின் தன்னிச்சையான போக்கு நெடுங் காலம் நீடிக்காது என்றும்—

அது தனது போக்கை மாற்றிக்கொண்டால் அமெரிக்கா உட்பட எல்லா நாடுகளுடனும் நட்புறவை வளர்க்க முடியும் என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. (ஐ)

# தலைநகரில் அதிபர் கபீலா!

## மக்கள் அமோக வரவேற்பு

கின்ஸாசா, மே 22

கொங்கோ ஜனநாயகக் குடியரசின் அதிபர் லோறன் கபீலா நாட்டின் தலைநகர் கின்ஸாசாவுக்கு விஜயம் செய்துள்ளார்.



நாட்டைவிட்டு முன்னாள் அதிபர் முபுட்டு தப்பியோடியதை அடுத்து கிளர்ச்சிப் படைகள் தலைநகர் கின்ஸாசாவைக் கைப்பற்றித் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த பின்னர் கபீலா அங்கு முதன் முறையாக விஜயம் செய்துள்ளார்.

லுமும்பாஸி நகரில் இருந்து புறப்பட்ட கபீலா கின்ஸாசா போய்ச் சேர்ந்ததும் பல்லாயிரக்கணக்கான மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து அவரை வரவேற்றனர்.

ஸயர் நதியோரம் அமைந்துள்ள பிரதமரின் வாசஸ்தலத்துக்குச் சென்ற கபீலா அங்கேயே தங்கினார்.

புதிய அரசை அமைக்கும் பணியில் அதிகாரிகளுடன் தீவிர பணிகளை அங்கிருந்து அவர் ஆரம்பிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# அமெரிக்க வெளியுறவு அமைச்சர் இந்தியா-பாகிஸ்தான் செல்வார்

## 14 வருடங்களின் பின் முதல் விஜயம்

வாஷிங்டன், மே 22

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மடலின் அல்பிரைற் இந்திய— பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்கும் விஜயம் செய்ய உள்ளார்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவை விருத்தி செய்ய இந்த விஜயம் உதவும் என்று வாஷிங்டனின் வெளியுறவு அமைச்சு தகவல் ஒன்று தெரிவித்தது.

1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஒருவர் இப்படியான ஒரு விஜயத்தை மேற்கொள்வது இதுவே முதல் தடவை ஆகும்.

தற்பொழுது பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் கோஹார் அயூப்கான், வாஷிங்டனில் வெளியுறவு அமைச்சர் மடலின் அல்பிரைற்றுடன் பேச்சு நடத்தி வருகிறார்.

# ராஜீவின் 6 ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று

## ஸ்ரீபெரும்புதூரில அனுஷ்டிப்பு

சென்னை, மே 22

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் 6 ஆவது நினைவு தினம் தமிழ்நாடு, ஸ்ரீபெரும் புதூரில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

ஸ்ரீபெரும் புதூரில் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட இடத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவு இடத்தில் வைபவங்கள் இடம்பெற்றன.

ராஜீவ் காந்தி நினைவு தினம் தொடர்பாக நேற்று முன்தினம் சென்னையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் தமிழ் நாடு முதல்வர் கருணாநிதி பயங்கரவாத எதிர்ப்பு உறுதி மொழி ஒன்றைச் செய்து வைத்தார்.

ராஜீவ் காந்தியின் உருவப் படத்துக்கு அவர் மலர் மாலையும் சூட்டினார்.

6 ஆண்டுகளுக்கு முன்னர் தற்கொலைக் குண்டுதாரி ஒருவரின் தாக்குதலுக்கு உள்ளாகி ராஜீவ் காந்தி மரணமடைந்தது தெரிந்ததே. (இ)

## உலக அரங்கில்

## நேபாளத்தில் ஊரடங்கு

காட்மண்டு, மே 22

தேர்தல் வன்செயல்களை அடுத்து நேபாளத்தில் ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்பட்டிருக்கிறது.

நேபாளத்தின் பிரதான எதிர்க்கட்சியான நேபாள காங்கிரஸினதும், ஆளும் கூட்டணிக் கட்சிகளினதும் ஆதரவாளர்கள் இடையே ஏற்பட்ட மோதல் இந்து — முஸ்லிம் கலவரமாக நாடு முழுவதும் பரவியுள்ளது.

இந்த வன் செயல்களினால் இதுவரை இருவர் உயிரிழந்துள்ளனர். 32 பேர் காயமடைந்துள்ளனர்.

நேபாளத்தில் ஆளும் கூட்டணியில் முக்கிய மூன்று கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. (ஐ)

# தமிழகத்தில் புலிகளின் நடவடிக்கை முற்றாகத் தடுக்கப்பட்டுவிட்டது

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு

சென்னை மே 22

''தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கையின் பயனாக மாநிலத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் முற்றிலும் ஒடுக்கப்பட்டுள்ளன''.

இவ்வாறு மாநில அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

விடுதலைப் புலிகள் மற்றும் தீவிரவாத அமைப்புகளின் செயற்பாடுகள் குறித்து மத்திய அரசுக்கு மாநில அரசு அறிக்கை ஏதும் அனுப்பவில்லை என்று சில பத்திரிகைகளில் வெளியான செய்திகள் தொடர்பாக இந்த செய்திக் குறிப்பு வெளியிடப்பட்டது.

மாநிலத்தில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் குறித்தும் மாநில அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் விடுதலைப் புலிகள் ஆதரவாளர்கள் குறித்தும் மத்திய உள் துறைக்கு முறையாக அறிக்கைகள் அனுப்பப்பட்டு வருவதாக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு தக்க நடவடிக்கை மேற்கொண்டு விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை ஒடுக்கியுள்ளதால் அறிக்கை அனுப்ப வேண்டிய சந்தர்ப்பம் இல்லை என்ற சூழ்நிலையில் தான் மத்திய அரசுக்கு மாநில அரசு அறிக்கை ஏதும் அனுப்பவில்லை என்று மத்திய உள்துறை அமைச்சர் நேற்று முன் சென்னையில் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாகவும் மாநில அரசின் செய்திக் குறிப்பு கூறுகிறது.

# என்னை நீக்க ஜெயலலிதாவுக்கு அதிகாரம் எதுவும் கிடையாது

## திருநாவுக்கரசு அறிவிப்பு

அ. தி. மு. க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாவுக்கு தம்மை கட்சியில் இருந்து நீக்குவதற்கு அதிகாரம் கிடையாது என்று தெரிவித்துள்ளார் அ. தி. மு. க வில் இருந்து வெளியேற்றப்பட்ட அதன் துணை பொதுச் செயலாளர் எஸ். திருநாவுக்கரசு.

ஜெயலலிதாவின் நடவடிக்கைகள் கட்சியின் விதிமுறைகளுக்கு மாறானவை என்று அவர் சென்னையில் நேற்று முன் தினம் செய்தியாளர் மாநாட்டில் கூறினார்.

15 நாள்களுக்குள் அ. தி. மு. க வின் பொதுக் குழு கூட்டப்பட வேண்டும் அப்படிக் கூட்டத்தவறும் பட்சத்தில் அதனைக் கூட்டும் கட்டாயம் தமக்கு ஏற்படும் என்றும் திருநாவுக்கரசு தெரிவித்தார்.

கட்சியின் சின்னம், கொடி, மற்றும் எம். ஜி ஆரின் கொள்கைகளைப் பாதுகாக்க தாம் சகல நடவடிக்கைகளையும் எடுக்கப்போவதாகவும்—

வேறு கட்சியில் சேரும் நோக்கம் தமக்குக் கிடையாது என்றும் — அவர் மேலும் கூறினார்.

எம். ஜி· ஆர், அ. தி. மு. க வின் பொதுச் செயலாளராக இருந்த திருநாவுக்கரசு கடந்த ஆண்டு மே மாதம் நடந்த பொதுத் தேர்தலின் போது அ. தி. மு. க வுடன் தமது கட்சியை இணைத்துக் கொண்டது தெரிந்ததே.

# 2 பிரெஞ்சு வர்த்தகர்கள் கின்ஸாசாவில் கொலை

கின்ஸாசா, மே 22

கொங்கோ தலைநகர் கின்ஸாசாவுக்கு அருகே புறநகர்ப் பகுதியில் வைத்து பிரெஞ்சு நாட்டு வர்த்தகர்கள் இருவர் நேற்று முன்தினம் மாலை படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

தலைநகர் கிளர்ச்சிப் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்த பின்னர் அங்கு வெளிநாட்டவர்கள் கொல்லப்பட்டிருப்பது இதுவே முதன் முறையாகும்.

லோறன் கபீலா தலைமையில் அதிகாரத்துக்கு வந்துள்ள புதிய அரசு மீது களங்கத்தை உண்டு பண்ணுவதற்காக இக் கொலைகள் திட்டமிட்டு நடத்தப்பட்டிருக்கலாம் என்று அதிகாரிகள் கூறியதாக செய்திகள் தெரிவித்தன.

கிளர்ச்சிப் படைகள் மத்தியில் அங்கு பிரெஞ்சு எதிர்ப்புணர்வு நிலவி வருவது தெரிந்ததே.

இதேவேளை — வர்த்தகர்களது படுகொலைகள் குறித்து பிரெஞ்சு அரசு தனது அதிர்ச்சியையும் கண்டனத்தையும் தெரிவித்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படி யுத்தம் நடத்தினால் ஒரு போதும் தீர்வு கிட்டாது!

## வன்னிசுடுகாடாக போகிறது என்கிறார் கூட்டணி எம்.பி.

கொழும்பு, மே 22

''வன்னியிலுள்ள பொதுமக்களுக்கு முன்னறிவித்தல் வழங்காது இராணுவ நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த ரீதியில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுமாயின் இறுதியில் அந்தப் பகுதி சுடுகாடாகவே மாறும். சமாதானத் தீர்வுக்கே இடமில்லாமல் போய்விடும்.''

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உப தலைவர் வீ. ஆனந்தசங்கரி பி. பி. சியின் சிங்களசேவைக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் வவுனியாவில் இருந்து இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள ஒரு மாதமாக தயாராகிவந்தது. ஆனால் இது குறித்து முன்னெச்சரிக்கையாக பொதுமக்களுக்குத் தெரிவிக்கவில்லை.

தற்போது மக்கள் ஒரு கிராமத்தில் இருந்து மறுகிராமத்திற்கு ஓடிப்போகிறார்கள். உண்ண உணவின்றி, குடிக்க நீரின்றி, இருக்க இடமின்றி மக்கள் ஓடுகிறார்கள்.

பொதுவாக வன்னிப் பகுதியில் ஏழை மக்களே வாழுகின்றனர்; உணவின்றி அவர்கள் எப்படி வாழமுடியும்?

மக்கள் வருவதற்கு ஒரு வழியை அமைத்து அந்த வழியால் வருமாறு அரசாங்கம் மக்களுக்குத் தெரிவித்திருக்கலாம், விரும்பியோர் அந்த வழியால் வரலாம் எனத் தெரிவித்திருக்கலாம்.

வவுனியாவுக்கு வன்னிமக்கள் வரமறுப்பதேன்? அவ்வாறு வந்தால் அவர்கள் மாதக்கணக்கில் வவுனியா முகாங்களில்தங்க நேரிடுகிறது. எவ்வளவு காலத்திற்கு முகாமில் தங்கியிருக்க முடியும்? அவர்கள் தீவிரவாதிகள் அல்லவே. அவர்கள் சாதாரண பொதுமக்கள்.

இவ்வாறு யுத்தத்தை மேற்கொண்டால் ஒரு போதும் தீர்வினை எட்ட முடியாது என அரசுக்கு தெரிவிக்க விரும்புகிறோம்

யுத்தத்தை நிறுத்தி விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும். தேவையெனில் வேறுநாடுகளின் ஒத்துழைப்பைப் பெறலாம். பிரிட்டன், சுவிட்சர்லாந்து. ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் உதவ முன்வந்துள்ளன.

எவருடைய உதிவியைப் பெற்றேனும் இந்தப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாண வேண்டும்.

இவ்வாறு வீ. ஆனந்தசங்கரி மேலும் தெரிவித்தார்.

## பிரதேசசெயலர்நியமனம்

யாழ்ப்பாணம், மே 22

வலி. வடக்கு பிரதேச செயலராக திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். மேலதிக அரசாங்க அதிபராகப் பணியாற்றும் எஸ். சண்முகநாதன் தற்போதையை பணியுடன் வேலணை உதவி அரசாங்க அதிபராகவும் பணியாற்ற நியமனம் வழங்கப்பட்டுள்ளது. வேறு ஒருவர் இப்பதவிக்கு நியமிக்கப்படும் வரை அவர் இப்பணியையும் மேற்கொள்வார்.

யாழ். பிரதேச செயலராக து. வைத்திலிங்கம் 4.4.97 முதல் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தற்சமயம் அப்பதவியை வகித்து வருகிறார்.

பொது நிர்வாக அமைச்சு உடனடியாக அமுலாகும் வகையில் இந்த நியமனங்களை வழங்கியுள்ளது.

(ஐ-3)

## கலைத்திறன் போட்டிகள்

வலிகாமம் தெற்கு, மே 22

நேற்று புதன்கிழமை நடைபெற இருந்த உடுவில் கல்விக் கோட்ட பாடசாலைகளின் கோட்ட மட்டத்திலான கலைத்திறன் போட்டிகள் எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் என உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் வ. ஆ. கணேசலிங்கம் அறிவித்துள்ளார்.

(இ-152)

## விண்ணப்பம் கோரப்படுகிறது

யாழ்ப்பாணம், மே 22

இலங்கை கணக்காளர் சேவையின் வகுப்பு இரண்டு தரம் இரண்டிலுள்ள கணக்காளர் பதவிகளுக்கு நேரடியாக ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 23 ஆம் திகதியாகும்.

இது சம்பந்தப்பட்ட விவரங்கள் வெளியாகிய 2-5-97 வர்த்தமானி அறிவித்தலை உதயன் பணிமனையிலும் பார்வையிடலாம்.

(இ-4-100)

## யாழ். பாடசாலைகளுக்கு கணனிகள் வந்தன

யாழ்ப்பாணம், மே 22

யாழ். மாவட்டத்தில் உள்ள 30 பாடசாலைகளுக்கு வழங்கவென ''மாஹோ'' கப்பலில் கணனிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் பருத்தித்துறைக்கு வந்துசேர்ந்த இக் கப்பலில் 2 ஆயிரம் பரல் தார், குத்தரிசி உட்பட பல பொருள்கள் வந்துள்ளன. பொருள்களை இறக்கும் பணி பருத்தித்துறையில் நடைபெறுகிறது.

(ஐ-3)

## செஞ்சிலுவை நடவடிக்கைக்கு இடையூறுகள் எதுவும் இல்லை

### அதன் வதிவிடப் பிரதிநிதி தெரிவிப்பு

''வன்னியில் எமது நடவடிக்கைகளை படையினர் கட்டுப்படுத்தவில்லை. இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவு தவிர்ந்த ஏனைய பொருள்களை நாம் வழங்கி வருகிறோம்''

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் இலங்கைவதிவிடப் பிரதிநிதி ஜெராட் பேட்றினட் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த சுமார் 400 பேருக்கு இதுவரை பிளாஸ்டிக் கூடாரங்கள், சமையற் பாத்திரங்கள், சவர்க்காரம் போன்றவற்றை வழங்கியுள்ளோம்.

மல்லாவிக்கு அருகே உள்ள பாலமோட்டையில்வைத்து இவற்றை வழங்கினோம் என்றும் அவர் கூறினார்.

(இ-150-3)

## வவுனியாவில் சிக்கிய 750 பேர் மடுவுக்கு

வவுனியாவுக்கு பொருள் கொள்வனவு செய்யச் சென்ற சமயம் வவுனியாவில் சிக்கியுள்ள முல்லைத்தீவு, கிளிநொச்சியைச் சேர்ந்த 750 பேரையும் மடுவுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

வவுனியா செயலகத்தில் இவர்களின் பெயர்கள் பதிவு செய்யப்பட்டு வருவதாகவும் —

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் இவர்களை பஸ்கள் மூலம் மடுவுக்கு அனுப்ப வவுனியா அரச அதிபர் ஏற்பாடு செய்வதாகவும் - தெரிவிக்கப்பட்டது. மடுவில் இருந்து அவர்கள் அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப் படுவார்கள்.

அதே சமயம் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்த 250 பேர் மடு முகாமுக்கு வந்துள்ளனர் என்று தகவல் கிடைத்துள்ளதாக மன்னார் அரச அதிபர் குறூஸ் தெரிவித்தார்.

மடுவில் உள்ள உதவி அரசாங்க அதிபருடன் தமக்கு நேரடித் தொடர்பு இல்லை என்றும் —

அகதிகளுக்கான ஐ நா. தூதரகத்தின் மூலமாகவே அவரிடம் இருந்து தகவல் கிடைத்துள்ளது என்றும் — அவர் தெரிவித்தார்.

(இ-150-3)

## கிழக்கு மாகாணத்திலிருந்து முல்லைத்தீவுக்குப் புலிகள்

விடுதலைப் புலிகளின் தலைவர் மறைந்திருக்கும் முல்லைத்தீவுக் காட்டுப் பகுதிக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து போராளிகள் அழைக்கப்பட்டுள்ளனர் என கொழும்புத் தகவல்கள் தெரிவிப்பதாக வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

தற்போதைய இராணுவ நடவடிக்கையின் போது காயமடையும் போராளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்குத் தேவையான மருந்து இல்லாது விடுதலைப்புலிகள் கஷ்டப்படுவதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெலி ஓயாவில் இருந்து புறப்பட்ட படையணி நெடுங்கேணி வரை சென்று நெடுங்கேணியைக் கைப்பற்றியது குறித்து விடுதலைப் புலிகள் ஆச்சரியம் அடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-10)

## படை நடவடிக்கைக்கு முன்பே பொது மக்கள் வெளியேறிவிட்டனர்

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு மே 22

வன்னியில் இராணுவ நடவடிக்கை இடம்பெறும் இடங்களில் இருந்து பொது மக்கள் பெரும் அளவில் வெளியேறி விட்டனர். இதனால் இந்த இராணுவ நடவடிக்கை, அவர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தாது.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் திஸ்ஸ ஜயதுங்க பி. பி. சி. யின் சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்-

'இராணுவநடவடிக்கையின் முதல் நாள் எதுவித சிரமமுமின்றி 5 கிலோமீற்றர் தூரம் எங்களால் முன்னேற முடிந்தது. இரண்டாவது நாள் நாங்கள் ஓமந்தைப் பகுதிக்குள் சென்ற போது பலத்த எதிர்த் தாக்குதலை எதிர்கொள்ள நேர்ந்தது. ஆனால் அத் தாக்குதலை முறியடித்து எம்மால் முன்னேற முடிந்தது. ஓமந்தையை கைப்பற்றிய படையினர் தற்போது கைப்பற்றிய பகுதியை பலப்படுத்தி வருகின்றனர்.

'ஓமந்தைக்கு வடகிழக்குத் திசையிலுள்ள நெடுங்கேணியையும் படையினர் கைப்பற்றி அங்கு தங்கள் நிலைகளைப் பலப்படுத்தி வருகின்றனர்.

'இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் ஆட்லறிமற்றும் எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். ஆனால் அவற்றிற்கு முகம் கொடுத்து அப்பகுதிகளைக் கைப்பற்றியுள்ளோம்.

'இரத்ததானம் செய்யும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது உண்மையே. நடவடிக்கை தொடரும் போது மேலும் பலர் காயமடையலாம். தற்போதும் பலர் காயங்களுக்கு உட்பட்டுள்ளனர்.

'ஆனால் அதில் அதிகமானோர் சிறு காயங்களுக்கே உட்பட்டுள்ளனர். பலத்த காயங்களுக்கு உட்பட்டோர் எண்ணிக்கை குறிப்பிடத்தக்களவு இல்லை. நூறுக்கும் சற்று அதிகமானோரே பலத்த காயங்களுக்கு உட்பட்டுள்ளனர்.

'இந்த இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகப் போகிறது என்பதை பொது மக்கள் அறிந்திருந்தனர்.

'இராணுவ நடவடிக்கை ஆரம்பமாவதற்கு ஒருகிழமை முன்னதாகவே மக்கள் பெருமளவில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களுக்கு வந்திருந்தனர்.

'நடவடிக்கை இடம்பெறும் பகுதிகளை விட்டு விலகிய பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களில் ஒதுங்கியுள்ளனர்.

'எனவே இந்த இராணுவ நடவடிக்கையினால் பொது மக்கள் எவருக்கும் எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை என என்னால் கூற முடியும்'

இவ்வாறு பிரிகேடியர்திஸ்ஸ ஜயதுங்கா மேலும் தெரிவித்தார்.

(இ-10)

## ஒற்றைக் காலில நின்று சாதனை புரிய முயற்சி

கொழும்பு, மே 22

தொடர்ந்து 72 மணித்தியாலங்கள் ஒற்றைக் காலில் நின்று சாதனை வீரர் சுரேஷ் ஜோக்கிம் என்பவர் உலக சாதனை புரியவுள்ளார். இன்று மாலை 3.00 மணியளவில் கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் அவர் இதனை ஆரம்பிப்பார்.

29 வயதான சுரேஷ் வடபகுதியைச் சேர்ந்தவர். 1992இல் 47 மணி நேரம் தொடர்ந்து ஒற்றைக் காலில் நின்று உலக சாதனை ஒன்றை ஏற்படுத்தியிருந்தார். ஆனால் இவரது இச் சாதனை அதே ஆண்டு அமெரிக்கர் ஒருவரால் முறியடிக்கப்பட்டது.

(ஐ)

## 750 கைதிகள் விடுதலை

கொழும்பு, மே 22

வெசாக் தினத்தை முன்னிட்டு சுமார் 750 சிறைக் கைதிகளுக்கு அரசு பொது மன்னிப்பு வழங்கியுள்ளது. நேற்று இவர்கள் விடுவிக்கப்பட இருந்ததாக சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ)

## சீருடைத் துணிகள்

சாவகச்சேரி, மே 22

தென்மராட்சிக் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கடந்த திங்கட்கிழமை இலவச சீருடைத் துணிகள் வழங்கப் பட்டன.

(இ-31)

## பதற்றமான நிலையில் மல்லாவியில் செஞ்சிலுவை, எம்.எஸ்.எவ். குழு

### வெடிச்சத்தங்கள் கேட்கின்றன என்கின்றனர்

கொழும்பு, மே 22

எமது அமைப்பின் அலுவலகத்தில் இருந்து வெளியேறி மல்லாவி ஆஸ்பத்திரியில் தங்கியுள்ளோம். செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு பிரதிநிதிகளும் எம்முடன் தங்கியுள்ளனர். வெடிச்சத்தங்கள் எமக்கும் கேட்கின்றன.

எம். எஸ். எவ் வைத்தியக்குழுவின் தலைவர் டொமின்கான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை மல்லாவி ஆஸ்பத்திரியில் 10 பேர் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் 2 பேர் பின்னர் இறந்து விட்டனர்.

சனி, ஞாயிறு கிழமைகளில் காயப்பட்டவர்கள் எவரும் வரவில்லை.

மல்லாவி ஆஸ்பத்திரியில் உள்ள எமக்கும், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கும் கொழும்புடன் நேரடித் தொடர்பு இருக்கிறது.

மல்லாவி ஆஸ்பத்திரியில் பொதுமக்களே சிகிச்சைக்காக வருகிறார்கள், விடுதலைப் புலிகள் தரப்பில் காயமடைந்த எவரும் அனுமதிக்கப்படவில்லை என்றார்.

(இ-150-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா / கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை

## பழைய மாணவர் சங்க ஆதரவில் நடைபெறும்

# "பூபாள ராகங்கள்"

## நிதியுதவிக் கலை நிகழ்வுச் சிறப்புமலர் (22 - 05 - 1997)

## ஆசியுரைகள், வாழ்த்துகள்

### ஆலயப் பிரதமகுரு

கம்பர்மலை அ. த. க. பாடசாலை பழைய மாணவர் சங்கமானது 1993 இல் ஸ்தாபிக்கப்பட்டு பாடசாலையின் கல்விசார் சூழலுக்கு பல ஆக்கபூர்வமான சேவைகளை செய்துள்ளது. இப்பாடசாலையின் மாணவ மணிகள் புலமைப்பரிசில், க. பொ. த (சா.த) பரீட்சைகளில் பெறுகின்ற பெறுபேறுகளும், இப்பாடசாலையில் இருந்து வெளியேறி உயர் தர வகுப்புகளில் கல்வி பயின்ற மாணவர்களின் பெறுபேறுகளுமே இப்பாடசாலையின் திறனுக்குத் தக்க சான்றாகும்.

இப்பாடசாலையானது கல்வித்துறையில் மென்மேலும் உயர்ச்சி பெற்று சாதனைகள் படைக்கவும், பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் சிறப்புடன் தொழிற்படுவதற்கும் எல்லாம் வல்ல முத்துமாரி அம்மனின் அருளினை வேண்டி உளங் கனிந்த ஆசிகளையும். நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

''மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெலாம்''

சிவாகம சித்தாந்த ஞான தேசிக பானு,
பிரதிஸ்டாலங்கார சித்தாந்த சாகரம்,
சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் (ச. நீ.),
பிரதம குரு,
வல்வை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்.
தலைவர், அகில இலங்கை சைவக்குருமார்
அர்ச்சகர் சபை.

### கலவிப் பணிப்பாளர்

யா / கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை பழைய மாணவர் சங்கம் பாடசாலைக்கு நிதி சேர்க்கும் நோக்குடன் நடத்தும் ''பூபாளராகங்கள்'' என்னும் நிகழ்வுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இச்சங்கம் விளையாட்டு மைதானத்தை திருத்திக் கொடுத்தல் முதல் பாடசாலைக்கு வேண்டிய பல ஆக்கபூர்வமான செயற்பாடுகளை காலத்துக்குக் காலம் செய்து வருகின்றது. துடிப்புடன் செயற்படுகின்ற இச்சங்கம் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு அச்சாணியாக விளங்குகிறது.

பாடசாலையின் வளர்ச்சிக்காக அயராது உழைக்கின்ற இளைய தலைமுறையினரை இப்பாடசாலையின் நலன் விரும்பிகள், பெரியோர்கள், புரவலர்கள் ஊக்குவிக்கவேண்டும், அவர்களின் முயற்சிக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று மிகவும் விநயமாகக்கேட்டுக்கொள்கின்றேன்

சி. சிவராசா,
கல்விப்பணிப்பாளர்.
யாழ். வலயம்-02

இருபாலை,
கோப்பாய்.

### உதவிக் கல்விப் பணிப்பாளர்

யா/ கம்பர்மலை அ. த. க. பாடசாலையின் பழைய மாணவர் சங்கமானது பாடசாலையின் வளர்ச்சி கருதி ''பூபாள ராகங்கள்'' என்னும் கலை நிகழ்வு நடத்துவதையிட்டு மகிழ்வுறுகிறேன். இந் நிகழ்வின் மூலம் பாடசாலை மேலும் மேலும் வளர எனது ஆசிகள் உரித்தாகுக.

வி. அருளானந்தம்,
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
கரவெட்டிக் கல்விக் கோட்டம்.

## பூபாள ராகங்கள்
### கலை நிகழ்வு நிகழ்ச்சி நிரல்

இடம்: யா/கம்பர்மலை
அ. த. க. பாடசாலை அரங்கம்
காலம்: 22 - 05 - 1997 (வியாழக்கிழமை)
மாலை 5. 00 மணி

தலைவர்:
திரு. மு. அனந்தேஸ்வரன் B. Ed. (Hons.)
( அதிபர் )

பிரதம விருந்தினர்:
திரு. சி. சிவராசா
(கல்விப் பணிப்பாளர், யாழ். வலயம் - 02)

சிறப்பு விருந்தினர்கள் :
திரு. செ. ஸ்ரீநிவாஸன்
(பிரதேச செயலர், கரவெட்டி.)
திரு. வ. செல்வராசா
(கோட்டக்கல்வி அதிகாரி, கரவெட்டி)
திரு. இ. கந்தசாமி
(ஒய்வு பெற்ற அதிபர், யா/கம்பர்மலை
அ. த. க. பாடசாலை)

### கலை நிகழ்வுகள்

★ நாட்டியக் கலையரங்கம்
★ கான மழை
★ பட்டிமன்றம் -

விடயம்:-சமூக வாழ்வியலில் பெரிதும் மேம்பாட்டை ஏற்படுத்துவது காதல் திருமணங்களா?
பெற்றோர் நிச்சயிக்கும் திருமணங்களா?

நடுவர்: நோப்பாய் சிவம் அவர்கள்

| காதல் திருமணங்களே! | பெற்றோர் நிச்சயிக்கும் திருமணங்களே! |
|---|---|
| திரு. இரா. அகிலன் | திரு. கு. மனோகரன் |
| திரு. இரா. இராஜேஸ் கண்ணன் | திரு. வீ. வீரகுமார் |
| திரு. எஸ். ரவி | திரு. தி. சுபாகரன் |

★ நாடகம் -
'இன்று மட்டும்' (சமூக யதார்த்தவியல் நாடகம்)
★ ஈழ நல்லூர் அருணா வழங்கும்
இன்னிசை நிகழ்வு.

### அபி. சபைச் செயலர்

கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் பழைய மாணவர் சங்கமானது 1993 இல் உருவாக்கப்பட்ட போதிலும் மிகக் குறுகிய காலத்தில் பெருவளர்ச்சியைக் கண்டுள்ளது. திறன் மிக்க இளைஞர்களின் செயற்பாடே இச்சங்கத்தின் வளர்ச்சிக்கு காரணமாகும். அவர்கள் பாடசாலை வளர்ச்சி கருதி ''பூபாள ராகங்கள்'' என்னும் நிகழ்வை நடத்துகின்றனர். இந்நிகழ்வு சிறப்பாக நடைபெறுவதற்கு என் மனமார்ந்த ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அ. சந்திரசேகரம்,
செயலாளர்.

பாடசாலை அபிவிருத்திச் சபை,
யா/ கம்பர்மலை அ. த. க. பாடசாலை.

## ஆசியுரைகள், வாழ்த்துகள்

### பாடசாலை அதிபர்

யா/கம்பர்மலை அ. த. க. பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் மிகவும் குறுகிய காலத்தில் பாடசாலையின் அபிவிருத்தி கருதி பல செயற்றிட்டங்களை நிறைவேற்றி உள்ளது. விடாமுயற்சியும் செயற்றிறனும் மிக்க பழைய மாணவர் குழாம் பாடசாலையின் வளர்ச்சியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு நடத்துகின்ற ''பூபாள ராகங்கள்'' கலை நிகழ்வு சிறப்புற நிகழ்வதற்கும் அதனூடாக பாடசாலைச் சமூகம் பயனுறுதி பெறவும் பாடசாலையோடு இணைந்த எல்லாம் வல்ல மனோன்மணி அம்பாள் அருள் பாலிப்பாராக!

மு. அனந்தேஸ்வரன் B. Ed. (Hons ),
அதிபர்,
யா/ கம்பர்மலை அ. த. க. பாடசாலை.

### பிரதேச செயலர்

கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் மிகவும் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. இள வயதினரின் நிர்வாகத்தில் இயங்கிடும் இச்சங்கம் பாடசாலையின் கல்வி, கலை, விளையாட்டுத்துறைகளில் பேருக்கம் எடுத்து வருவதனால் பாடசாலை இத்துறைகளில் பெரு வளர்ச்சி கண்டு வருகிறது. பாடசாலையின் கல்வியில் சங்கம் காட்டிவரும் அக்கறை காரணமாக மாணவர்களின் கல்வித்தரம் மிகவும் உயர்ந்துள்ளது. அண்மைக்காலங்களில் பரீட்சைகளில் கிடைக்கப்பெற்ற சிறப்புத்தேர்ச்சி முடிவுகளே இதற்குச் சான்று பகர்கின்றன.

1993 இல் ஸ்தாபிக்கப்பட்ட இச்சங்கமானது லண்டன் போன்ற நாடுகளிலும் கிளைகளை அமைத்து பெருமை கண்டுள்ளது. இன்றைய நிகழ்விற்கு வழங்கப்படுகின்ற ஆதரவு பாடசாலையின் பெருவளர்ச்சிக்குப் பேருதவியாக இருக்கும்.

பெருகட்டும் நும்ஆதரவு! வளரட்டும் சங்கத்தின் பணி!! ஒளிரட்டும் பாடசாலையின் பெயர்!!

செ. ஸ்ரீநிவாஸன்,
பிரதேசசெயலர்,
வடமராட்சி தெற்கு, மேற்கு,
கரவெட்டி.

### பெற்றோர்கள் சார்பில்

கல்லூரி, ஆசிரியர் பழைய மாணவர் சங்கம் இவையனைத்தும் மாறாத நிறுவனங்கள். இவற்றின் வளர்ச்சியும் தேக்கமும் மாறிகளான எம்மைப் பொறுத்தது. கம்பர்மலைக் கல்லூரி, உருவத்திலே மிக மிகச் சிறியது. ஆனால் அதன் சாதனைகளில் பல பாராட்டப்பட வேண்டியவை. குறிப்பாகப் பழையமாணவர் சங்கத்தின் தூண்டல், கல்லூரியின் துலங்கலுக்கு பிரதான காரணியாக அமைவது வெள்ளிடைமலை.

பழைய மாணவர் சங்கத்தின் சேவைகள், ஆசிரியர்களின் அயரா முயற்சிகள், மாணவரின் ஆக்கங்கள், பெற்றோரின் அரவணைப்புக்கள் அனைத்துமே சங்கமமாக வேண்டும்.

K. நல்லையா
உயர்தர கணித ஆசான்.

( 8 ஆம் பக்கம் பார்க்க)


### கலை நிகழ்வுகள் சிறப்புற வாழ்த்துவோர்:

தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகளுக்கும், உங்கள் முக்கிய ஆவணங்களை லெமனேற்றிங் கவரிடவும்
ராஜன் வீடியோ மூவிஸ் சென்ரர்,
பருத்தித்துறை.

கல்யாணி கிறீம் ஹவுஸ்,
73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ராஜா கிறீம் ஹவுஸ்,
36, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தங்கராசா நகைமாடம்
நகை உற்பத்தியாளர்
யாழ். வீதி,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

தமிழ்ப்பூங்கா புத்தகசாலை
பிரதான வீதி,
நெல்லியடி.

சுகுணலட்சுமி ஆடையகம்
140, பிரதான வீதி,
பருத்தித்துறை.

குணம் குளிர்களி அகம்
(GUNAM CREAM HOUSE)
பஸ் நிலையம்,
பருத்தித்துறை.

பி. ஐ. பர்னாண்டோ
மூக்குக் கண்ணாடியகம்,
பஸ்கட்டும் நிலையம்,
237, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

பிரபா வீடியோ சென்ரர்
உடுப்பிட்டி றோட்,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

குருநாதர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை வீதி,
உடுப்பிட்டி.

JAMUNA TRADES
Main Street,
Nelliady.

ARUL VINAYAGAR
(Dealers in motor Vehicle Spare parts)
3, Stanley Road,
J. M. C. Building
Jaffna.

இ. ச. பேரம்பலம் சக நிறுவனம்
50, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

அருள்ஸ் ஆபரண மாளிகை
வல்வெட்டித்துறை வீதி,
உடுப்பிட்டி.

சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை
நெல்லியடி,
கரவெட்டி.

செல்லமுத்தாஸ் புடைவை மாளிகை
நெல்லியடி,
கரவெட்டி.

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
பாரதி வீதி, கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

பி. ஜே. பர்னாண்டோ
மூக்குக்கண்ணாடியகம்,
பஸ்கட்டும் நிலையம்
542, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சி. ரி. பி. (C.T B.) கோண்டாவில் சாலை வளவில் இரண்டு வேப்பமரங்கள் விற்பனைக்கு உண்டு. பார்வையிட்டு தனித்தனியாக விலைகளை 26.05 97 ஆம் திகதி திங்கட்கிழமை 12 00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்கவும். V.S. சொக்கலிங்கம், பலாலி வீதி, கோண்டாவில். (47064)

### மாறிய சைக்கிள்

சர்வதேச தொலைத் தொடர்பு நிலையத்துக்கு முன்னால் லுமாலா பெண்கள் சைக்கிள் (கறுப்புநிறம்) 14 5 97 அன்று தவறுதலாக மாறி எடுத்துச் செல்லப்பட்டு விட்டது. எடுத்துச் சென்றவர்கள் யாழ். பல்கலைக் கழக பாதுகாப்புப் பிரிவினருடன் தொடர்பு கொள்ளவும். (47074)

### புறோயிலர்

புறோயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு, இல 153, நாவலர் வீதி, மனோகரா தியேட்டர் அருகில், யாழ்ப்பாணம். [47042]

### திருமண சேவை

எமது சேவையில் சகல மதம்,உத்தியோகம், தொழில் சார் மணமக்களதும் குறிப்புக்களையும், தகவல்களையும் ஒருங்கிணைப்பதே பொருத்தமான விரைவான திருமணங்களுக்குரிய வழியாகும். பல தரத்திலுமான மணமக்கள் தேர்வுக்கு, மணமக்கள் பெற்றோர் நேரில் தொடர்பு:- ''சேவை நப்பசம்'' விவாக சேவை, வைமன் வீதி, நல்லூர். (47085)

### தவறிவிட்டது

15 05. 97 இல் பேசாலையிலிருந்து புறப்பட்ட கப்பலில் வந்த செபமாலை தாசர் மடத்திலுள்ள அருட் சகோதரி ஒருவரது ஆங்கில கல்வி நூல் அடங்கிய புத்தகப் பொதியொன்று தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து செபமாலை கன்னியர் மடம் 123, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (47088)

## கருத்துரை

யாழ்ப்பாணம், மே 22

இணுவில் தெஸ்பியன் கலை வட்டத்தினரின் மாதாந்த கருத்தரங்குத் தொடரில் இன்று வியாழக் கிழமை மாலை 3 மணிக்கு 'ஈழத்து இலக்கிய வரலாறு' எனும் பொருளில் யாழ். பல்கலைக் கழக தமிழ்த் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ். சிவலிங்கராஜாவின் கருத்துரை தெஸ்பியன் கல்வி நிலையத்தில் இடம்பெறும். (இ-4)

## மதகுருமார் கூட்டம்

வலிகாமம் தெற்கு, மே 22

இந்துசமய,கிறிஸ்தவ சமய மதகுருமார்கள் கலந்து கொள்ளும் முக்கிய கூட்டம் ஒன்று எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கில கல்லூரியில் நடைபெறும் என்றும்—

சகல இந்து கிறிஸ்தவ மத குருமார்களையும் தவறாது இதில் கலந்து கொள்ளுமாறும்—

உடுவில் பகுதி இராணுவ அதிகாரி மங்கள அறிவித்துள்ளார். (இ-152)

---

## LEO CLUB OF MANIPAY PARISH

WE SERVE

இன்று (22 - 05 - 97 வியாழன்) நடைபெற விருந்த அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

நன்றி.

- செயலாளர்

(47232)

---

## ஸ்ரீ செல்வா அகலத்திரை அரங்கு

**179/3, ஸ்ரான்லி வீதி**

தினசரி 10 .00 - 12. 00 மணி

யாழ், நகரில் அகலத் திரையில் முதல் முறையாக குதூகல ஆரம்பம்.

சிவாஜி, K. R. விஜயா நடிக்கும்

**★ கந்தன் கருணை ★**

காலை 10. 00 மணி

ரஜனி, ரம்பா நடிக்கும்

**★ அருணாச்சலம் ★**

மாலை 2. 00 மணி

தொடர்ந்து காண்பிக்கப்படும்.

★ பெண்களுக்கான ஆசனப் பதிவு முன்கூட்டிப் பெற்றுக் கொள்ளலாம். (47086)

---

வலைப்பந்தாட்டத்தில் வெற்றியீட்டிய உடுவில் மகளிர் கல்லூரியினரை

## வாழ்த்துகின்றோம்

தொடர்ந்து வந்த வலைப்பந்தாட்டப் போட்டிகளில் முதலிடத்தைத் தட்டிக் கொண்டதுடன் உப வலயத்திலும் முதலாம் இடத்தைத் தனதாக்கிக் கொண்ட **உடுவில் மகளிர் கல்லூரியினரின் 17,19 வயதுப்பிரிவினரை பாராட்டுகின்றோம்.** தொடர்ந்து வரும் வலய மட்டப் போட்டியிலும் இவர்கள் வெற்றிபெற வேண்டும் என்று மனதார வாழ்த்துகின்றோம்.

பெற்றோர், பழைய மாணவர் சங்கம்,
உடுவில் மகளிர் கல்லூரி.

(சி/755)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 09 — 12 — 1973

உதிர்வு: 01 — 06 — 1996

### செல்வி முகுந்தினி நடராஜா

(யாழ். இந்து மகளிர் கல்லூரி பழையமாணவி, உ/த 1992, யாழ். பல்கலைக்கழக வெளிவாரி வர்த்தமானி முதலாம் ஆண்டு மாணவி)

திதி: 22-05-1997

கன்னியாய் மலர்ந்து நீயும்
கட்டழகு மலருமானாய்
புன்னகை பூக்கும் உந்தன்
பூ விதழ் காணுவோமோ!
மண்ணுலகத்தில் காலம்
முகுந்தினி மலரே உன்னை
விண்ணுல கெய்த வைத்த
கொடுமையை மறப்போமோ நாம்!

உன்பிரிவால் துயருறும்:
குடும்பத்தினரும்,
உற்றார், உறவினர்களும்.

''ராஜ் மஹால்''
தாவடிச் சந்தி,
கொக்குவில்.

(இ/752)

---

விடுதலை விடுதலை விடுதலை
நோயிலிருந்து விடுதலை
பேயிலிருந்து விடுதலை
பாவத்திலிருந்து விடுதலை
சாபத்திலிருந்து விடுதலை
இயேசு தருகின்றார்

## சுவிஷேசக் கூட்டங்கள்

இடம்: சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
காலம்: 22 - 05 - 97, 23 - 05 - 97
நேரம்: மாலை 3 மணி (புதிய நேரம்)

செய்தி அளிப்பவர்:

**போதகர்: யோண் அன்ரனி**
திருகோணமலை

வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்கப்படும்
அனைவரும் வருக. (47033)

---

இருபாலையில் . . .
இணையற்ற சேவையில் ...

## இருபத்தைந்தாவது ஆண்டில்...

## O/L DAY CLASSES

(காலை 8.00 - பி.ப 1.00 வரை)

6 மாத துரித மீட்டல் வகுப்பு

| | |
|---|---|
| கணிதம்: | திரு. T. வரதராஜா |
| | திரு. T. அற்புதராஜா |
| விஞ்ஞானம்: | திரு. இரா. செல்வவடிவேல் |
| ஆங்கிலம்: | திரு. S. K. மகாலிங்கம் |
| சமூகக்கல்வி: | திரு. K. S. முத்துலிங்கம் |
| தமிழ்/ சமயம்: | திரு. B. பாலகணேசன் |
| வர்த்தகம்: | திரு. N. மோகனேசன் |

**மே 28 இல் ஆரம்பம்**

உங்கள் இடங்களை உறுதிப்படுத்த முன்கூட்டியே பெயர்களைப் பதியுங்கள்.

**ஏனைய வகுப்புகளுக்கான புதிய அனுமதிகள் மீண்டும் மே 25 முதல்.**

ESTD:-1973 REGD:-№ J/7993


**The Express Institute**

IRUPALAI - KOPAY.

(47084) அதிபர்.

---

## 60 ஆவது அகவை நினைவஞ்சலி



### அமரர் ஆறுமுகம் ஜெயரத்தினம்

பிறப்பு: 22-05-1937
இறப்பு: 10-04-1995

இன்று உங்களுக்கு அறுபதாவது பிறந்த நாள்; எவ்வளவு கனவுகள் உங்கள் மனதில் இந் நாளைப்பற்றி. அவ்வளவும் நனவாக்கக் காத்திருந்தோம் நாம்; தொட்டிலில் வந்த பந்தம் தூர தேசம் சென்றோம். கட்டிலுக்கு வந்த உறவு கல்யாணம் பார்க்கப் போக கள்ளனவன் காத்திருந்து உங்களைக் கவர்ந்து சென்றானே! விதி செய்த சதியினால் இன்று உங்களை சதிபதியாய் காண முடியாமல் போனோம் நாம். உங்கள் கடமை முடிந்ததென்று சென்று விட்டீர்கள் நீங்கள். எங்கள் கடமை நாங்கள் செய்ய எங்களிடமே வாருங்கோ நீங்கள்.

தந்தையின் ஆத்மா சாந்தியடைய கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாய்த் தரும்:

அருமை மக்கள், அன்பு மருமக்கள்,
ஆசைப் பேர்த்தி, மற்றும் உற்றார், உறவினர்.

66/2, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். (47073)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர்-இணைந்தசேவைஅலுவலர் இணக்கமான செயற்பாடு அவசியம்

## நல்ல மாணவரை உருவாக்க இது தேவை

**அதிபர் சேவையில் உள்ளவர்களை கோட்ட கல்வி அலுவலகங்களுக்கு நியமிப்பது சம்பந்தமாக உதயனில் வெளிவந்த கருத்துக்களை ஒட்டி —**

**கல்வித் திணைக்களம் வலயம் ஒன்றின் நலன்புரி சங்கத் தலைவரும், அரசாங்க எழுதுவினைஞர் சங்க யாழ். கிளையின் முன்னாள் செயலாளருமான செ. மெற்றாஸ்மயில் விடுத்திருக்கும் அறிக்கை இதுவாகும்.**

கடந்த 23-04 97 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் அரசாங்க விகிதர் சேவைச் சங்க யாழ். கிளைச் செயலாளர் வெளியிட்ட ஓர் அறிக்கையில் ''இலங்கை அதிபர் சேவையில் உள்ளவர்களை வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சு கோட்டக்கல்வி அலுவலகங்களில் நியமிப்பதை வன்மையாகக் கண்டிப்பதாக'' குறிப்பிடப்பட்டிருந்தது.

யாழ். கல்வித் திணைக்களத்தில் எழுதுவினைஞர் சேவையில் உள்ளவர்களில் நூற்றுக்கு தொண்ணூற்று ஐந்து வீதமானவர்களுக்கு மேல் அரசாங்க விகிதர் சேவைச் சங்கத்தில் அங்கத்தவர்களாக இல்லை. எனவே இக்கருத்து கல்வித் திணைக்களத்திலுள்ள எழுதுவினைஞர்களின் ஏகோபித்த பிரதிநிதித்துவமான கருத்தல்ல என்பதை முதலில் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

இவ்வறிக்கையை ஆட்சேபிக்கும் முகமாக 6-5-97 ஆம் திகதிய உதயனில் ஜோண்டாவில் ஆனந்தவேந்தன், ''இப்பொழுதோ கல்வி அதள பாதாளத்தில் விழுந்து கிடக்கிறது. இதனைச் சீர் செய்வதற்கு எடுக்கப்பட்ட நடைமுறையில் இதுவும் ஒன்றே என'' அதிபர் தரம் 1 ஐ சேர்ந்தவர்களை பணிப்பாளர்களாக நியமிப்பது கல்விச் சீர் திருத்தம் செய்வதற்காக என்ற பாணியில் வாசகர் திருமுகத்தில் கருத்து வெளியிட்டிருந்தார்

இவ்வாறான அறிக்கைகள், கருத்துக்கள் கல்வித் திணைக்களத்தில் சிறப்பான நிர்வாகத்தை நடத்த அடிப்படைத் தேவையான, ஆசிரியர், அதிபர், கல்வித்திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோரிடையே நிலவ வேண்டிய நல்லெண்ணத் தேவையை மாசுபடுத்தி ஒருவருக்கொருவர் கசப்பான உணர்வுடன் சந்திக்க வேண்டிய நிலையை உருவாக்கியுள்ளது எனவே நேர்மையான நியாயமான ஓர் அறிக்கையை வெளியிட வேண்டிய கட்டாயத்தின் நிமித்தம் இதனை வெளியிடுகிறேன்.

இன்றைய தமிழ் பேசும் மக்கள் பல இன்னல்கள், துன்பங்கள், கஷ்டங்கள், சுமைகள் மத்தியிலும் தமது மாணவர்களுடைய கல்வியிலே அக்கறை கொண்டு, அவர்களுக்கு கல்வி புகட்டுவதற்காக பல வழிகளிலும் முயற்சி எடுத்து வருகிறார்கள். நல்ல மாணவ சமுதாயத்தை ஆக்கும் பொறுப்பை கல்விப்பகுதியிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். இந்த நிலையில், பல ஆசிரியர்கள் இடம் பெயர்ந்ததால், ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாலும் அதிபர்கள, கல்வி அதிகாரிகள் பலர் ஒருபுறம் ஓய்வு பெற மறுபுறம் அவ் வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் புறக்கணிக்கப்படுவதாலும் திணைக்களத்தில் இணைந்த சேவையிலுள்ளோர் பற்றாக்குறையாலும், கல்வி நிர்வாக அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள முடியாது தத்தளிப்பதுயாரும் தெரிந்த விடயமாகும்.

### தற்காலிக ஏற்பாடு

இந்நிலையில்பல கோட்டக் கல்வி அலுவலகங்களை நிர்வகிக்க அதிகாரிகள் இல்லாததினால், அதிபர் தரம் ஒன்றில் உள்ளவர்களில் சிலரைத் தெரிந்து பதில், பிரதி உதவிக் கல்விப்பணிப்பாளராக மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் நியமித்தார். மாணவர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான தற்காலிக நடவடிக்கையாக இது மேற்கொள்ளப்பட்டது. இது வரவேற்கத்தக்க விடயமாகும்.

பல உதவி அரசாங்க அலுவலகங்களில் கச்சேரிகளில் ஸ்ரீலங்கா நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையால், எழுதுவினைஞர் தரம் ஒன்றைச் சேர்ந்தவர்கள், பதில் நிர்வாக அதிகாரியாகவோ, முறையான பதில் உதவி அரசாங்க அதிகாரியாகவோ முறையான நியமனம் பெற்று சிறப்பாகக் கடமையாற்றுகிறார்கள். அவர்கள் கூட்டும் மாநாடுகளில் திணைக்களப் பிரதிநிதிகள், பொறியியலாளர், வைத்தியர் எல்லோரும் பங்குபற்றுகிறார்கள். உதவி அரச அதிபர் எழுதுவினைஞர் தரத்தைச் சேர்ந்தவர் என்று கூறிவிட்டு அவர்கள் மாநாட்டில் பங்குபற்றாது, அவரின் பணிப்பினை ஏற்காது விடுவதில்லை. எதிர்ப்புக் காட்டுவதும் இல்லை.

அதேபோன்றுதான் ஆசிரியர் தரத்திலுள்ளவர்களுக்கும், அவர்களின் முகாமைத்துவ அனுபவங்களைக் கணக்கில் எடுத்து, அவர்களுக்கு கல்விச் சேவையை பிரதானமாகக் கொண்ட கல்வித் திணைக்களத்தில் கல்விக் கோட்டங்களின் பொறுப்பை, நிர்வகிக்கும் பொறுப்பை மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஒப்படைத்துள்ளார். நியமன அதிகாரி அமைச்சின் செயலாளரே. அவர்களின் முக்கிய கடமை கல்வி நிர்வாகமாகவே இருக்கும்.

இவர்கள் கோட்டங்களுக்கு பணிப்பாளர்களாக நியமனம் செய்யப்படும்போது, பாடசாலை நிர்வாகத்தைவிட மேலதிகமான பொது நிர்வாகக் கடமைகளையும் செய்ய வேண்டியுள்ளது. இவ்விடயம் இவர்களுக்குப் புதியதானதினால், தாபன, அலுவலக நிர்வாக, சுற்றுநிருப அறிவுகள் பெறவேண்டிய கட்டாயம் உள்ளது. எனவே அலுவலகத்தில் இணைந்த சேவை உத்தியோகத்தர்களுடன் முரண்படாமல் புரிந்துணர்வுடன், நன்கு பழகி பொது நிர்வாக விடயங்களில், அவர்களின் ஆலோசனைகளையும் பெற்று, நடு நிலையில் நின்று வரவில், பேச்சில், செயலில், கடமையில் நேர்மையாக நடப்பார்களாயின் அவர்களின் பணிப்புரைகளைப் பெற்று செயற்படுவதில் எவ்வித ஆட்சேபனையையும் யாரும் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை.

### எல்லோரும் சிறந்த நிர்வாகிகள் அல்லர்

எனினும் எல்லா அதிபர்களும் சிறந்த முகாமைத்துவமுடையவர்கள், சிறந்த நிர்வாகிகள் என்பதையும், எனது அனுபவ வாயிலாக ஏற்கமுடியாது. இது யாருக்கும் தெரிந்த விடயமாகும். ஆனால் சிறந்த முகாமைத்துவமுடைய அதிபர்கள், ஆசிரிய தரத்திலுள்ளவர்கள் இருக்கின்றார்கள்.

உதாரணமாக அதிபர் தரம் 1 ஐச் சேர்ந்த சாவகச்சேரிக் கோட்ட பதில் பிரதிக் கல்விப் பணிப்பாளர், ஆசிரிய தரமுடைய பதில் உடற்பயிற்சி உதவிக் கல்விப் பணிப்பாளர், பதில் ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர்கள் சிறந்த முகாமையாளராகவும், இணைந்த சேவைஉத்தியோகத்தர்களின் முழுமையான ஒத்துழைப்பையும் பெற்று பாராட்டத் தக்க முறையில் கடமையாற்றி வருகின்றார்கள்.

எனினும் பாடசாலைகளை சரிவர நடத்த முடியாத அதிபர்களுக்கு, வேறு இடமில்லாமல் கோட்டக்கல்வி அலுவலகங்களில் சில கடமைகளைச் செய்வதற்காகக் (செயலாளரின் நியமனம் பெறாது) கோட்டத்துடன் இணைக்கப்பட்டாலும், நியமன அதிகாரியான கல்வி அமைச்சின் செயலாளரின் பதில் நியமனக் கடிதத்தைப் பெறாது, தங்களைத் தாங்களே உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கூறிக்கொள்ளும் மேற்படி அதிபர்களினதும் மேலாதிக்கத்திற்கு, இணைந்த சேவை உத்தியோகத்தர்கள் கட்டுப்படமாட்டார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆசிரியர்கள், அதிபர்கள் இணைந்த சேவை உத்தியோகத்தர்கள், கல்விப் பணிப்பாளர்கள் ஒன்றுபட்டு, புரிந்துணர்வுடன் செயல்பட்டு நல்ல மாணவ சமுதாயத்தை கட்டி எழுப்பப் பாடுபடுவோமாக.

★

---

# 31 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

**டாக்டர் சபாரத்தினம் சபாநாதன்**
**25-04-1997 ஆந் திகதி லண்டனில் அமரரானார்**

ஒய்வுபெற்ற ஆசிரியர் வேலணையூர் ச. சபாரத்தினம், திருமதி ச. மகேஸ்வரி ஆகியோரின் மைந்தன்
ஆஸ்திரேலிய ராய்டர் தாபனத்தின் நிதிக்கட்டுப் பாட்டாளர் திரு. ச. சபானந்தனின் தம்பி,
வைத்தீஸ்வரவித்தியாலயத்தின் பழைய மாணவர்,
ஐக்கியராச்சியத்தின் சிறந்த பன்னிரு டாக்டர் மேதைகளில் ஒருவரெனக் கணிக்கப்பட்டு பிரதமரால் தங்கப் பதக்கம் சூட்டப் பெற்றவர்,

**டாக்டர் ச. சபாநாதன்**

அவர்களின் மறைவிற்கு எங்களது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம். அன்னாரின் ஆதமா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

திரு. வே. க. கந்தசாமி (புதுமைலோலன்) குடும்பத்தினர் (மாமன்)
கலாநிதி. க. குணராசா (செங்கை ஆழியான்) குடும்பத்தினர் (மாமன்)
திரு. சண்முகராசா வாமதேவன் குடும்பத்தினர். [தம்பி]
திருமதி கந்தையா சாரதாம்பாள் குடும்பத்தினர் [மாமி]

அச்சக ஒழுங்கை, தலையாளி, கொக்குவில்.

(47091)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது கணக்காய்வு நிறுவன பணியாளரான
**திரு. இ. முரளிதரன் அவர்களின்**
அருமைத் தந்தையார்

**கு. இராசரட்ணம் அவர்கள்**

இயற்கை எய்தியதற்கு மிகவும் வருந்துகின்றோம்.
அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சோமேஸ்வரன், ஜே. எம். இராஜநாயகம் அன் கம்பனி**
**திரு. எம். இராஜநாயகம், F.C.A.S, A.T**
(பங்குதாரரும் நடத்துனரும்)
**மற்றும் நிறுவன பணியாளர்கள்.**

(47087)

---

# 8 நாளாக வவுனியாவுக்கு வடக்கே உணவு லொறிகள் செல்லவில்லை

வவுனியாவுக்கு வடக்கே நொச்சிமோட்டை ஊடான உணவு வாகன அணி செல்லும் வாய்ப்பு இப்போதைக்கு இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

தினமும் 30 லொறிகளில் உணவுப் பொருள்கள் முன்னர் எடுத்துச் செல்லப்பட்டன.

ஆனால் இராணுவ நடவடிக்கை காரணமாக கடந்த 8 நாள்களாக இது தடைப்பட்டுள்ளது.

அதன் காரணமாக முல்லைத்தீவு, வவுனியா, மடுப் பகுதிகளில் உணவு நெருக்கடி ஏற்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது.

இதற்கிடையில் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர்கள் உணவுப் பொருள்களை அனுப்புமாறு அரசாங்கத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் எஸ். தில்லை நடராசா அனுப்பிவைத்துள்ள அவசர செய்தியில், மாவட்டத்தில் உணவுப் பொருள்களுக்கு பெருந்தட்டுப்பாடு நிலவுவதாகவும் உடனடியாக 200 லொறிகளில் அரிசியும், 200 லொறிகளில் கோதுமைமாவும் 50 லொறிகளில் சீனியும் அனுப்பிவைக்குமாறும் கோரியுள்ளார்

இதேவேளை முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ஆர். தருமகுலசிங்கம் தமது பகுதியில் பெருமளவு மக்கள் இடம் பெயர்ந்திருப்பதாகவும்—

நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு உணவு விநியோகிப்பதற்கு போதியளவு உணவு கையிருப்பில் இல்லை என்றும் அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்துள்ள செய்தியில் தெரிவித்திருக்கிறார்.

இரண்டு வாரத்திற்குப் போதுமான உணவுப் பொருள்களே கையிருப்பில் இருப்பதாகவும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருக்கின்ற அவசர நோயாளிகள் வவுனியாவுக்கும் அனுராதபுரத்திற்கும் மேலதிக சிகிச்சைக்காக செல்ல வேண்டியிருக்கிறது என்றும்—

இதற்குத் தேவையான போக்குவரத்து வசதிகளைச் செய்து தருமாறும் அவர் கோரியிருக்கிறார். (இ-4)

---

## பேச்சில் முன்னேற்றம்

கடந்த 27 நாள்களாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுவரும் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களின் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் கல்வி, உயர் கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரானாவுக்கும் இடையே வேலை நிறுத்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக செவ்வாய் நடந்த பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்பட்டதாக கல்வி, உயர்கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

---

## வவுனியாவுக்கு வடக்கே உள்ள உணவு நிலைவரம்
### தொண்டர் அமைப்புகள் ஆராய்வு

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் வவுனியாவுக்கு வடக்கே உள்ள தற்போதைய தரை நிலைவரம் குறித்து சர்வதேச தொண்டர் அமைப்புக்கள் மல்லாவியில் கூடி ஆராய்ந்து வருகின்றன.

உணவுநிலை, இருப்பிடநிலை, பாதுகாப்பு நிலை ஆகியன தொடர்பாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவுக்கு வடக்குக்கான உணவுப் பொருள்களை எடுத்துச் செல்ல அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவி நாடப்பட்டுள்ளதா என ஐ நா. தூதரகத்தின் இலங்கைப்பிரதிநிதி பீற்றர் மேயரிடம் கேட்டபோது ''எமது அமைப்பு இதில் சம்பந்தப்படவில்லை. எம்மை இது சம்பந்தமாக எவரும் கேட்கவும் இல்லை'' என்று பதில் அளித்தார்.

(இ-150-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திங்கள் கடமைக்கு திரும்பினால் தண்டனை வழங்கப்பட மாட்டாது

## பல்கலை. ஊழியருக்கு அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மே 22

பல்கலைக்கழக ஊழியர்களின் வேலை நிறுத்தத்திற்கு தீர்வுகாண்பதற்கான பேச்சுவார்த்தைகள் நேற்று முன்தினம் காலை பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான தொழிற்சங்கங்களின் சம்மேளனப் பிரதிநிதிகளுக்கும் கல்வி அமைச்சர் றிச்சட் பத்திரனவுக்கும் இடையில் இடம்பெற்றன. வேலைநிறுத்தக்காரர் அனைவரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை கடமைக்கு திரும்ப வேண்டும் என்று அமைச்சர் வலியுறுத்திக் கூறினார். அன்றையதினம் கடமைக்கு திரும்பும் ஊழியர்கள் மீது தண்டனைகள் எதுவும் விதிக்கப்பட மாட்டாது என்றும் அமைச்சர் உறுதி கூறியுள்ளார்.

பல்கலைக் கழக ஊழியர்களுக்கு பாக்கிக் கொடுப்பனவுகளை வழங்க இணங்கிய அமைச்சர் ஜூலை மாதத்திலிருந்து இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்றார்.

பல்கலைக் கழக ஊழியர்களின் சில பிரச்சினைகளுக்கு தீர்வுகாண சம்பள நிர்ணயக் குழுவுடன் வெள்ளிக்கிழமை பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இதே வேளையில், பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தின் கூட்டுச் செயலாளர் எவ். ஏ. ஆரியபால கருத்து தெரிவிக்கையில் தங்கள் கோரிக்கைகளுக்கு நீதியான தீர்வு கிடைக்கா விட்டால் வேலை நிறுத்தம் தொடர்ந்து நடத்தப்படும் என்று கூறினார். (இ-4)

## சுகாதார கருத்தரங்கு

திருநெல்வேலி, மே 22

வலி. தென் மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவிலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கான முழு நாள் சுகாதார கருத்தரங்கு எதிர்வரும் 24 ஆம் திகதி மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறும். (இ-135)

## புலிகளின் பொருள்களை எடுத்துச் சென்றாராம்

### மூதூரில் பெண் ஒருவர் கைது

விடுதலைப் புலிகளின் பொருள்களை எடுத்துச் சென்றார் என்று கூறப்படும் பெண் ஒருவரை மூதூர் பள்ளிக குடியிருப்பு காவல் நிலையத்தில் கடமையாற்றும் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

இவருடன் கூடச் சென்ற 17 வயது யுவதி ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பெண் குண்டுகளை வெடிக்க வைக்கும் 32 உபகரணங்களை தனது பொதியில் வைத்திருந்தார் என்றும்—

இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக திருகோணமலை பாதுகாப்பு இணைப்புக் காரியாலயத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்கள் என்றும்— அரசதரப்பு செய்தி ஒன்று தெரிவித்தது. (இ-4)

## உறவினர் பார்வைக்கு பட்டியல்

யாழ்ப்பாணம், மே 22

வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளில் காணாமற் போனோரின் பெயர்ப்பட்டியல் நாளை வெள்ளிக்கிழமையில் இருந்து எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை உறவினர் பார்வைக்காக யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள கைதானோர் காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கத்தில் வைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கைதானோர் காணாமற் போனோர் தொடர்பாக ஆராய்வதற்கான சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மேற்படி சங்கப் பணிமனையில் நடைபெற உள்ளதாக கைதானோர் காணாமற் போனோர் பாதுகாவலர் சங்க செயலாளர் தெரிவித்துள்ளார். (இ-4)

## கெயர் உதவி

யாழ்ப்பாணம், மே 22

யாழ்ப்பாண விவசாயிகளுக்கு விவசாய உற்பத்தியை அதிகரிக்க கூடியதாக கெயர் ஸ்தாபனம் விதைகள் மற்றும் உரம், மருந்து தெளிகருவிகள் ஆகியவற்றை வழங்கவுள்ளது.

(இ-111)

# தென். பகுதி பல்கலைக்கழகங்கள் கடந்த காலத்தில் என்னசெய்தன?

## சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான குழு கேள்வி?

யாழ்ப்பாணம், மே 22

கடந்த காலங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பல்வேறு நெருக்கடிகள், பிரச்சினைகளை எதிர்நோக்கிய போது தென் இலங்கைப் பல்கலைக் கழகங்கள் என்ன செய்தன?

மேற்கண்டவாறு கேள்வி எழுப்பி சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி ஆரம்பிக்கப் பட்ட பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களின் வேலை நிறுத்தம் இன்றுவரை நீடிக்கின்றது, கல்விசாரா ஊழியர்களின் கோரிக்கைகளின் நியாயத்தை ஆராய நாம் முன்வரவில்லை. யாழ்ப்பாணப்பல்கலைக்கழகமாணவர்களின் கல்வியைக் குறித்து அவர்களுக்கு ஒரு தார்மீகக் கடமைப்பாடு உண்டு என்பதையேசுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

சீரழிந்தும் சிறுமைப்பட்டதுமான நமது சமுதாயத்தின் ஒரே பற்றுக் கோடாக இருப்பது கல்விச் செல்வம் தான். நெருக்கடியான காலகட்டத்திலும் யாழ்ப்பாண மாணவர்கள் படித்துத் தள்ளி விடுகிறார்களே என்று தென்னிலங்கையில் மக்கள் ஏக்கப் பெருமூச்சு விடுவதனை நாம் அடிக்கடி கேட்டிருக்கின்றோம். இன்று அந்தப் பெருமைக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதனை கல்வி சாரா ஊழியர்கள் அறியாமல் இல்லை.

நமது கல்வித் திட்டத்தினால் எமது நாட்டுப் பிள்ளைகள் 22 அல்லது 23 வயதிலேதான் பட்டதாரி மாணவர்களாகின்றனர். ஏனைய நாடுகளில் 17 அல்லது 18வயதில் பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கு சென்று விடுகின்றனர். 20 அல்லது 21 வயதில் பட்டதாரிகளாக வெளியேறுகின்றனர் ஆனால் நமது நாட்டிலோ பிள்ளைகள் 27 அல்லது 28 வயது வரை பல்கலைக் கழகத்தில் மாரடிக்க வேண்டிய தலைவிதி. இந்த வேலை நிறுத்தம் இதனை மேலும் காலதாமதப் படுத்தும் என்பதனையும் கல்வி சாரா ஊழியர்கள் அறிவார்கள்.

இக்கால தாமதம் இம் மாணவர்களையே எண்ணி, எதிர்காலக்கனவுகள் காணும் பெற்றோர்களையும், சகோதர சகோதரிகளையும் பெரும் பாதிப்புக்குள்ளாக்கும்.

இன்று நம்மோடு இருக்கும் பல்கலைக்கழக மாணவர்கள் ஆற்றல்மிக்கவர்கள். ஆனால் வேண்டிய பணவசதியும் செல்வாக்கின்மையால் வெளிநாடு செல்லாதவர்கள். இந்த நாட்டிலேயே ஒரு வருங்காலத்தை தேடிக் கொள்ளலாம் என்று எண்ணுபவர்கள்.

இந்த வேலை நிறுத்தம் காலதாமதத்துக்கு மட்டுமன்றி உதவி நன்கொடை விநியோகம், வீட்டுவாடகை, போக்குவரத்துச் செலவு என்பனவற்றிற்கும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றது என்பது கண்கூடு.

ஏனைய பல்கலைக் கழக கல்வி சாரா ஊழியர்களுடன் ஒத்துழைக்க வேண்டுமென்ற வாதத்தில் நியாயமுண்டு. வேலை நிறுத்த நடவடிக்கையின் போது கருங்காலிகளாகினோம் என்ற பெயரைப் பெற்றுக்கொள்ள எந்த தொழிற் சங்கவாதியும் விரும்பமாட்டான்.

ஆனால் தென்னிலங்கையில் உள்ள பல்கலைக் கழகங்கள் எமது பிரச்சினைகளையும், வேதனைகளையும், குமுறல்களையும், கண்ணீரையும் கடைக் கண்ணாலாவது பார்த்திருக்கிறார்களா என்று நாம் சிந்திக்கவேண்டும்.

தென்னிலங்கை மக்களின் பிரச்சினைகள் வேறு எமது பிரச்சினைகள் வேறு. வீடு தீப்பற்றி எரிகின்ற பொழுது எமது தனிப்பட்ட பிரச்சினைகளை மறந்து செயற்பட வேண்டும்.

எமது பொருளாதார முன்னேற்றமே எல்லாவற்றையும் விட முக்கியமானது என்று கல்விசாரா ஊழியர்கள் கருதுவார்களெனில் திக்கற்றபிள்ளைகளின் வருங்காலத்தை பாழடித்தவர்கள் என்ற பழி அவர்களைச் சூழ்ந்து கொள்ளும்.

கல்வி சாரா ஊழியர்கள் [illegible]

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ★

(இ)

# மின் விநியோகநேரத்தில் மாற்றம் வேண்டும்

யாழ்ப்பாணம் மாநகரசபைப் பகுதியில் ஆரம்பத்தில் மாலை 6.30 மணி முதல் காலை 5.30 மணி வரை மின்சாரம் வழங்கப்பட்டது. ஆனால் மின்சாரத் தொடர்புகள் வழங்கப்பட்ட சகலருக்கும் ஒரே நேரத்தில் மின்சாரம் வழங்குவதில் பிரச்சினை ஏற்பட்டதால் சுற்றுமுறையில் மின்சாரம் வழங்கும் திட்டம் தற்பொழுது அமுல் செய்யப்பட்டு வருகிறது.

ஒரு நாளுக்கு இரவு 7.15 மணியிலிருந்து 8.15 மணி வரையும் பின்னர் 10.30 மணியிலிருந்து காலை 6. மணி வரையும்.-

அடுத்த நாளுக்கு இரவு 8.15 மணியில் இருந்து காலை 6.00 மணிவரையும் என்ற சுற்று முறையில் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.-

முன்னைய மின்சாரம் வழங்கும் நேரத்தை மாற்றி சுற்று முறையில் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதன் முக்கிய நோக்கம் மின் விநியோக நேரம் குறைந்தாலும் சீராக வழங்கவேண்டும் என்பதே.

ஆனால் இப்படி வழங்கப்படும் மின் விநியோகமும் சில சமயங்களில் சீராக இல்லை. நேரம் பிந்தியும் கிடைக்கிறது. சில சமயங்களில் ''ரியூப் லைட்டுகள்'' கூட எரிய மறுக்கின்றன.

### வாசகர் திருமுகம்

தற்போதைய சுற்று முறை மின் விநியோகத்தில் உள்ள மற்றொரு பெரிய குறைபாடு என்னவென்றால் மாணவர்கள் படிக்கும் நேரங்களில் மின்சாரம் வழங்கப்படாததே.

மின்சாரத்தை மக்கள் அதிகம் பயன்படுத்தும் நேரத்தைப் பார்த்தே மின்வெட்டு நேரம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

மின்சாரம் தேவையான நேரம் வழங்கப்படாமல் தேவை இல்லாத நேரம் (நித்திரை கொள்ளும் நேரம்) வழங்கப்படுவதால் பயன்பெறப்போவது எவரும் இல்லை.

ஆகவே எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவரின் நன்மை கருதியாவது இரவு 6.30 மணி முதல் காலை 6.00 மணிவரை மின்விநியோகத்தை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ம. அ. நவரெட்ணம்

37 / 6 மாட்டின் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

# இலக்கிய ஆர்வலர் சார்பில் ஒரு வேண்டுகோள்

ஐயா, 17. 05. 1997 ஆம் திகதிய உதயனில் இலக்கிய நூல்களுக்கான பரிசுத் திட்டம்-1996 என்று விளம்பரம் வெளிவந்திருந்தது. வடக்கு- கிழக்கு மாகாண அமைச்சின் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் இந்த ஏற்பாட்டையும் இலக்கிய ஆர்வத்தையும் பாராட்டுகின்றேன். ஆனால் அதற்கு ஒரு சிறு ஆலோசனையையும் சமர்ப்பிக்க விரும்புகின்றேன்.

மேற்படி போட்டிகளுக்குரிய விதிகளில் இரண்டாவது விதியில் கூறப்பட்டதை மேலும் விஸ்தரித்து, சிறிது தளர்த்தி அச்சில் வாராத நூலாகவும் இருக்கலாம் என்பதையும் சேர்த்து முடிவுத் திகதியையும் சிறிது பின்போட வேண்டும் என்று தமிழ் கூறும் நல்லுலகின் இலக்கிய ஆர்வலர் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

அந்தக் காலத்தில் அறிஞர்கள் இருந்தார்கள்; புலவர்கள், நூலாசிரியர்கள், படைப்பிலக்கிய கர்த்தாக்கள் என்று எல்லோரும் இருந்தார்கள்; பணம்தான் இருக்கவில்லை. இப்போதும் அப்படித்தான் எத்தனையோ ஆர்வலர்கள் எழுதி எழுதி எல்லாம் தயாரான நிலையில் சில (புகழ் பெற்ற எழுத்தாளர்கள் கூட) காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

யார் கண்டது? சில சமயம் அவர்கள் மூலம் சில நவீன திருவள்ளுவர்கள், கம்பர்கள் தோன்றி நமது மிக மிகச் சிக்கலான பல நவீன பிரச்சினைகளுக்குத் தீர்வு கூறிவிடவும் கூடுமல்லவா?

திரு. சுந்தரம் டிவகலாலா முன்பு உள்ளூராட்சி அமைச்சில் இருந்து செய்த தமிழ் இலக்கியச் சேவையை இன்றும் இலக்கியச் சுவைஞர் மறந்துவிடவில்லை.

நூல்கள் 1996 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிச 31 வரை அச்சில் வெளிவந்ததாக, அல்லது அச்சிடுவதற்குத் தயார் நிலையில் உள்ள கையெழுத்துப் பிரதிகளாக இருக்க வேண்டும் என்று மாற்றப்படவேண்டும் என்று இலக்கிய ஆர்வலர்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

சி. சதாசிவம்

மட்டுவில்,

## 'பூபாள ராகங்கள்'

சிறப்பு மலர் தொடர்ச்சி...

# கோட்டக் கல்வி அதிகாரியின் வாழ்த்துரை

கம்பர் மலைஅரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை கரவெட்டிக் கல்விக் கோட்டத்திலுள்ள கிராமப்புறப் பாடசாலைகளில் ஒன்றாகும். இப்பாடசாலையின் பழைய மாணவர்கள் பாடசாலையின் அபிவிருத்தி கருதி நிதிதிரட்டும் நோக்குடன் ''பூபாளராகங்கள்'' என்னும் கலை நிகழ்வை நடத்துவது குறித்துப் பெருமிதமடைகிறேன்.

ஒரு பாடசாலை எந்தச் சமூகத்தில் அமைந்துள்ளதோ அந்தச் சமூகத்துக்கு அப்பாடசாலையை வளர்க்க வேண்டிய கடப்பாடு உண்டு. இவ்வகையில் கம்பர்மலை அ. த. க. பாடசாலையின் பழைய மாணவர்கள் தமது கல்வி அன்னையை வளமாக்க எடுக்கும் முயற்சி போற்றுதற்றியது.

''பூபாள ராகங்கள்'' கலைநிகழ்வு கம்பர்மலை அ. த. க. பாடசாலையை மேலும் வளமாக்க மனமார வாழ்த்துகிறேன்.

வ. செல்வராசா,
கோட்டக் கல்வி அதிகாரி,
கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## வெள்ளம் வந்த பின்...

வன்னிப்பகுதியில் நடத்தப்பட்டுவரும் போரை உடனே நிறுத்துமாறு தமிழ்க் கட்சிகள் அரசாங்கத்தைக் கேட்டிருக்கின்றன.

ஆனால் அரசாங்கத்தின் காதில் இது விழுமா என்பது சந்தேகத்துக்கு உரியதே. களத்தில் முன்வைத்த காலை பின்னே வைக்கும் நிலையில் இராணுவத்தினர் இல்லை. போரை இந்தளவோடு நிறுத்துமாறு அரசாங்கம் சொன்னாற் கூட இராணுவத்தினர் அதற்குச் சம்மதிப்பரோ என்பது ஐயத்துக்கு உரியதாகும்.

அரசாங்கம் கூட, தொடங்கிய போரை இடையில் நிறுத்த விரும்பாது.

எனவே போரை உடனே நிறுத்துமாறும், சமாதானப் பேச்சு வார்த்தையைத் தொடங்குமாறும் இப்போது கேட்டு ஆக்கபூர்வமாக எதுவும் நடக்குமா? தமிழ்க் கட்சிகள் கோரிக்கை விடுகின்றனவே என்பதற்காக, பெரும் எடுப்பில் முன்னெடுக்கப்பட்டிருக்கும் போரை நிறுத்துமாறு ஜனாதிபதி படையினருக்குக் கட்டளை இடமாட்டார் என்பது மட்டுமன்றி அவர்களின் விருப்பம் என்னவென்று கூட அறிவதற்கு முனையமாட்டார்.

தமிழ்க் கட்சிகள் பொறுப்புடன் நடந்து கொள்பவையாக இருப்பின், வன்னிப் போரை அரசாங்கம் ஆரம்பிப்பதற்கு முன்னர் இது குறித்து அதனிடம் தொடர்பு கொண்டிருக்க வேண்டும்.

எல்லாத் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளும் தூதுக்குழுவாகச் சென்று ஜனாதிபதியை நேரில் சந்தித்து வன்னிப் போரைத் தொடங்க வேண்டாம் என்று வற்புறுத்தி இருக்க வேண்டும்.

இத்தகைய போரினால் இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் அனுபவிக்கக் கூடிய வாழ்க்கை அவலங்களை அவருக்கு விளக்கியிருக்க வேண்டும். இந்த மக்கள் எத்தனை தடவைகள் இடம்பெயர்ந்து எத்தகைய இழப்புகளைச் சந்தித்துள்ளார்கள்; இன்னும் ஒரு தடவை இடம்பெயரின் அவர்களின் வாழ்க்கை அந்தத்துக்கு வந்துவிடும் என்பதனை அவரிடம் இடித்துரைத்திருக்க வேண்டும்.

வன்னிப் போர் தொடுக்கப்படமாட்டாது என்று வாக்குறுதி தந்தால் மட்டுமே நாடாளுமன்றத்தில் அரசை ஆதரித்து வாக்களிப்போம் என்று கூட அழுத்தம் போட்டிருக்கலாம்.

போரினால் விடுதலைப் புலிகளைவிட பொது மக்களே பல வகைகளாலும் பாதிக்கப்படுகிறார்கள் என்பது ஒன்றும் புதிய விடயமல்ல.

வன்னிப் போருக்காகப் படையினர் தம்மை உஷார்ப்படுத்திக் கொள்கிறார்கள் என்பதனை பத்திரிகைகள் அது தொடங்குவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னரே தெரிவித்தன.

இத்தகைய பின்னணியில் வெள்ளம் வருவதற்கு முன்னரேயே தமிழ்க்கட்சிகள் அணை கட்ட முயற்சித்திருந்தால் ஒரு வேளை கைகூடியிருக்கலாம், இப்போது சந்தேகந்தான்...!

# யாழ். மீனவருக்கான வள்ளங்கள்: இங்கேயே தயாரிக்கத் திட்டம்

## அமைச்சர் இந்திகா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 22

யாழ். மீனவருக்கான வள்ளங்களை யாழ். மாவட்டத்தில் பெறக்கூடிய மரங்களைப் பயன்படுத்தித் தயாரிக்கும் புதிய திட்டம் ஒன்று விரைவில் அறிமுகப்படுத்தப்படும்.

கடற்றொழில் நீரியல் அமைச்சர் இந்திகா குணவர்த்தனா இத்தகவலைத் தெரிவித்துள்ளார்:

வடக்கு — கிழக்குப் பகுதியில் கடற்றொழிலாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஈ. பி. டி. பி. அமைப்பின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான குழு ஒன்று நேற்று முன்தினம் அமைச்சர் இந்திகா குணவர்த்தனாவைச் சந்தித்துக் கலந்துரையாடியது.

இந்தச் சந்திப்பின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா, ஈ. பி. டி. பி. பேச்சாளர் சி. தவராசா, அம்பாறை மாவட்ட இணை அமைப்பாளர் மா. சங்கர், மற்றும் அம்பாறை மாவட்ட தமிழ் கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய குழுவே அமைச்சருடன் பேச்சு நடத்தியது.

இந்தச் சந்திப்பின் போது வடக்கு — கிழக்கு மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து அமைச்சருக்கு ஈ. பி. டி. பி. குழுவினர் எடுத்து விளக்கினர்.

மீன்பிடி உபகரணங்கள்-8 குதிரை வலுவுடைய இயந்திரங்கள் என்பவற்றை அவ்வப் பகுதி இராணுவப் பொறுப்பதிகாரியின் சிபார்சுடன் பாதுகாப்பு அமைச்சுக்கு விண்ணப்பித்து கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்கள் பெறமுடியும் என்றும் இதற்கான அனுமதியைப் பாதுகாப்பு அமைச்சு வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

(ஐ-3)

# தமிழ்பெண்கொலையில் பொலீஸார் தொடர்பு

## ஜனாதிபதிக்கு எம்.பி. கடிதம்

கொழும்பு, மே 22

மட்டக்களப்பு மாவட்டத்துக்கும் அம்பாறை மாவட்டத்துக்கும் இடைப்பட்ட சென்ரல் முகாம் 11 ஆம் கொலனியில் இடம் பெற்ற குடும்பப் பெண் ஒருவரின் கொலைக்கும் பொலீஸாருக்கும் இடையே தொடர்பு இருப்பதாகவும்—

இது தொடர்பாக மேலதிக விசாரணைக்கு உத்தரவிடுமாறும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதியைக் கேட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள அவசர கடிதம் ஒன்றில் அவர் தெரிவித்திருப்பதாவது:-

11 ஆம் கொலனியில் 102 ஆம் இலக்க வீட்டில் வசித்த நான்கு பிள்ளைகளின் தாயான முருகேசபிள்ளை கோணேஸ்வரி (வயது 35) கடந்த 17-5-97சனிக்கிழமை இரவு கற்பழிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

சில பொலீஸ்காரர்கள் அவரைக் கற்பழித்த பின்னர் அவரது பிறப்பு உறுப்பினுள் 'கிரனேட்' ஒன்றை வைத்து வெடிக்கச் செய்துள்ளனர்.

இது தொடர்பாக கொலையுண்ட பெண்ணின் கணவரான கே. செல்வகுமார் சென்ரல் முகாம் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

வைத்திய பரிசோதனைகள் இடம் பெறுவதைத் தடுப்பதற்காக பிரஸ்தாப பெண்ணின் சடலத்தைப் புதைத்துவிடுமாறு அவரது உறவினர்களிடம் பொலீஸார் கூறியுள்ளனர். அதன்படி அவரது சடலம் புதைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இது போன்ற பல சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. ஆனால் அவற்றைப் பகிரங்கப்படுத்த மக்கள் அஞ்சுகின்றனர் அவர்களிடையே பெரும் பீதி நிலவுகிறது.

சட்டத்தையும் நீதியையும் இந் நாட்டில் நிலை நாட்ட விரும்பும் தாங்கள் இது தொடர்பாக அக்கறை செலுத்துவீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

இவ்வாறு யோசப் பரராஜசிங்கம் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (ஐ)

# தமிழர் இசை பற்றிய ஆய்வுக்கு வழிகாட்டியாக அமையும் நூல்

## வெளியீட்டு விழாவில் கலைப்பீடாதிபதி பேச்சு

யாழ்ப்பாணம், மே 22

தமிழர்களது சிறப்பு வாய்ந்த இசைக் கருவியினை மீட்க எண்ணி ஆய்வு செய்தவர் சுவாமி விபுலானந்தர். அவருடன் யாழ் பற்றிய ஆய்விலே ஈடுபட்டிருந்த பண்டிதர் சச்சிதானந்தன் யாழ் இசைக் கருவியினை அறிவியல் அடிப்படையிலே விளக்க முனைந்ததன் விளைவுதான் ''தமிழர் யாழியல்'' என்னும் இந்த நூலாகும். தமிழர் இசை பற்றிய ஆய்வுக்கு இந் நூல் நல்ல வழிகாட்டியாக அமையும்.

இவ்வாறு தெரிவித்தார் பேராசிரியர் அ. சண்முகதாஸ்.

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தினர், பண்டிதர் க. சச்சிதானந்தனின் ''தமிழர் யாழியல்'' என்னும் நூலை கடந்த வாரம் வெளியிட்டனர்.

வெளியீட்டு விழா, பலாலி ஆசிரியர் கலாசாலையில் அதன் அதிபர் கவிஞர் சோ. பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் நூலை வெளியிட்டு வைத்து உரையாற்றினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழருடைய இசைக்கருவிகளுள் யாழ். மிகவும் சிறப்பு வாய்ந்தது. பெரிய யாழைக் கையில் வைத்திருந்த பாணனைப் பாடிய பெரும்பாணாற்றுப்படை, சிறிய யாழினைக் கையில் வைத்திருந்த பாணனைப் பற்றிப் பாடிய சிறுபாணாற்றுப்படை ஆகிய இலக்கியங்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழிலே எழுந்தன.

தமிழிசையை மீட்டெடுக்க வேண்டும் என்னும் ஆவலை ஆசிரியர் இதனூடாக வெளிப்படுத்தியுள்ளார். இது தொடர்பான ஆய்வுகள் எமது யாழ். பல்கலைக்கழகத்தில் தொடங்கப்பட்டுள்ளன. இசைத்துறையைச் சேர்ந்த பண்ணிசைப் புலவர் நா. வி. மு. நவரத்தினம் அவர்கள் சம்பந்தர் தேவாரங்களை அடிப்படையாகக் கொண்டு பண்ணிசை பற்றிய விரிவான ஆய்வினைச் செய்துள்ளார். பண்டிதர் சச்சிதானந்தனின் நூல் இத்தகைய ஆய்வுகளுக்கு வழிகாட்டியாக அமையும் என்றார்.

கவிஞர் சோ. பத்மநாதன் தமது தலைமையுரையில் கூறியதாவது:

தமிழிசையை மீட்டெடுக்கும் முயற்சியில் முதன்முதலில் இறங்கிய சுவாமி விபுலானந்தரின் அடியொற்றி பண்டிதர் சச்சிதானந்தன் அவர் பணியைத் தொடர்ந்துள்ளார். தமிழ்ப் புலமையுடன் விஞ்ஞான அறிவும் சுவாமி விபுலானந்தருக்கு இருந்தது அத்தகைய பல்துறை ஆற்றல் மிக்கவர்கள் சிலரே இந்நாளில் இருந்தபோதும் அடிகளின் பணியை யாரும் தொடரவில்லை.

பண்டிதர் சச்சிதானந்தன் பல்துறை ஆற்றல் மிகுந்தவர். இந்த அறிவுப் பரப்பின் துணையுடன் தமிழர் இசை குறித்த ஆய்வுகளை மேற்கொண்டவர். கீழைத்தேச மேலைத்தேச இசைகளை பௌதிக விஞ்ஞான ரீதியில் நுணுக்கமாக ஆராய்ந்து யாழுக்கும் வீணைக்கும் உள்ள வேறுபாட்டை விளக்கிய பாங்கு பாராட்டுக்குரியது — என்றார்.

### கல்விக் கல்லூரி வேண்டும்

வாழ்த்துரை வழங்கிய யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கூறியதாவது:

யாழ்ப்பாணம் ஆரிய திராவிடபாஷாபிவிருத்திச் சங்கம் பல வருடங்களாக நற்பணியாற்றி வந்தாலும் அது கல்வித் திணைக்களத்துடன் இணைந்த பெயரளவில்தான் நிற்கிறது. இந்த நிறுவனம் பொருள் வளம், கல்வி வளம் மிக்க நிறுவனமாக வளர்த்தெடுக்கப்பட்டு பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாக உயர்த்தப்பட வேண்டும். யாழ்ப்பாணச் சமூகம் இன்று சர்வதேச நிதி திரட்டக்கூடிய ஆற்றல் படைத்தது என்பதால் இது சாத்தியமானதே.

ஜி. சீ. ஈ. உயர்தர மாணவர்களுக்கு ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு பாடமாக உள்ளது. இன்று ஈழத்தமிழரின் முழுமையான வரலாறுகளை உள்ளடக்கிய நூல்கள் இல்லை. தமிழர்களது வரலாறு பேணப்படவேண்டுமாயின் ஈழத்தமிழர்இலக்கிய வரலாறு குறித்து சிறந்த நூலாக்கம் செய்யப்பட வேண்டும். யாழிசையில் இது ஓரளவு எடுத்தாளப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகம் அமைவதற்குமுன்னர்இங்குஐந்து ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் இருந்தன. அதன் வழி உருவான ஆசிரியர்கள்தான் பண்டிதர்களாகவும் வந்துள்ளனர். வடபகுதிக்கு ஒரு கல்வியியல் கல்லூரி எமக்குப் போதாது. சமுதாய வளர்ச்சிக்கு கல்விக்கல்லூரிகள் பெருந் துணை புரிகின்றன. அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் கல்விக்கல்லூரி நிறுவுவதற்கு கல்வி அதிபதியவர்கள் பெரிதும் முயல்கின்றார். அவரது முயற்சி நிறைவேற வேண்டும்—என்றார்.

பண்டிதர் சச்சிதானந்தனின் இந்த நூல் குறித்து அவரை வாழ்த்துவதுடன் மரபுவழிக் கல்வி பரவுவதற்கு நீண்டகாலமாக உழைத்து வந்த ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் இந்த முயற்சியையும் பாராட்டுகின்றேன். இவ்வாறு துணைவேந்தர் பாலசுந்தரம் பிள்ளை பேசும் போது கூறினர்.

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடாதிபதிபேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் நூல் ஆய்வுரை நிகழ்த்தினார்.

யாழ். கல்வி வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளரும் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் தலைவருமான சு. இரத்தினராசா, சங்கச்செயலாளர் நா. சுந்தரலிங்கம், சொக்கன் ஆகியோரும் விழாவில் பேசினர்.

நூலின் முதற் பிரதியை பலாலி ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் பிரான்சிஸ் றோச் பெற்றுக் கொண்டார். (அ-111)

## சமய சந்நிதிகளில்

அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்பாள் ஆலய கும்பாபிஷேக தினமான இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு புதிய சப்பறசகடை வெள்ளோட்ட விழா நடைபெறும். (இ-4)

★ ★ ★

நவிண்டில் குலனையம்பதி குலனை விநாயகர் திருக்கோயிலின் வருடாந்த தீர்த்த உற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும். (இ-4)

# இன்று கப்பல் சேவை

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு இன்று இருகப்பல்களில் பயணிகளை ஏற்றிச்செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இன்று கப்பலில் செல்ல பதிவு செய்தவர்களை இன்று காலை 7 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

# மரத்தினால் விழுந்து படுகாயம்

கள் சீவுவதற்காகப் பனை மரத்தில் ஏறியவர் தவறி விழுந்து படுகாயமடைந்தார்.

சாவகச்சேரி மறவன்புலவு பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற இச் சம்பவத்தில், சீவல்தொழிலாளியான கந்தையா தர்மலிங்கம் (வயது 45) என்பவரே படுகாயமடைந்தவராவார். இவர் நினை விழந்தநிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (ஐ-15)

## நாளை

**வைகாசி 9**

வெள்ளிக்கிழமை

திதி: பிரதமை பிற்பகல் 2.32 வரை.

நட்சத்திரம்: அனுஷம் காலை 7.42 வரை.

சுபநேரம்: 5.52 – 7.22

ராகுகாலம்: 10.22 – 11.52

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசுடன் பேச்சு நடத்த எவரையும் அனுப்பவில்லை

## புலிகளின் பேச்சாளர் மறுப்பு

கொழும்பு, மே 22

அரசாங்கத்துடனும், எதிர்க்கட்சித் தலைவருடனும் பேச்சு நடத்த வெளிநாட்டுக் குழு ஒன்றை விடுதலைப் புலிகள் கொழும்புக்கு அனுப்பியதாக வெளிவந்த செய்தியில் உண்மை எதுவும் இல்லை என்று விடுதலைப் புலிகளின் சர்வதேச பேச்சாளர் அன்ரன் ராஜா ரோய்ட்டர் செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

அமெரிக்காவில் உள்ள தமிழ் கல்விமான்கள் அடங்கிய குழு ஒன்று சமாதானப் பேச்சுக்கு சம்மதம் தெரிவிக்கும் விடுதலைப் புலிகளின் கடிதத்துடன் கொழும்பு வந்துள்ளது என்றும்—

அக்குழு ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருடன் பேச்சு நடத்தவிருக்கிறது என்றும்—கொழும்பு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

''வடக்கில் இராணுவ நடவடிக்கை மும்முரமடைவதால் வெளிநாட்டுக் குழுவை நாம் அனுப்பியதாக வந்த செய்தியில் உண்மையில்லை.''

அரசுடனோ, எதிர்க்கட்சியுடனோ அல்லது வேறு யாருடனுமோ எமது இயக்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் பொருட்டு எவரையும் அனுப்பவில்லை என்று அன்ரன் ராஜா தெரிவித்துள்ளார். (ஐ-3)


சுப்பஸோவின்

நேற்றைய வெளியீடுகள்!

கார்த்திக், நக்மா

பிஸ்தா

(ஒறிஜினல்)

சுரேஸ், ஊர்வசி

நான் ஒரு இந்தியன்

(ஒறிஜினல)

கார்த்திக், ரோசினி

சிஷ்யா

(ஒறிஜினல்)

அர்ஜுன், ரோஜா

அடிமைச் சங்கிலி

(ஒறிஜினல்)

ஓடியோ டிஸ்க் வெளியீடுகளான அடிமைச் சங்கிலி, வி. ஐ. பி, நத்திங் என்பன மாஸ்டர் பதிவு செய்து தரப்படும். புதிதாக வரும் ஓடியோ, வீடியோ CD க்கள் எம்மிடம் விற்பனைக்குண்டு.

குறிப்பு: என்றும் தரமான 'CD' பிரதிகளுக்கு

சுப்பஸோ வீடியோ

100 A, ஸ்ரான்லி றோட்,

யாழ்ப்பாணம்.

(சி/716)



பிறந்த நாள் வாழ்த்து



★ மாகி யாழன் ★

22 - 05 - 1997

அற்புத குணராஜா- சாரதா தம்பதிகளின் செல்வப் புதல்வன் மாகி யாழன் தனது முதலாவது பிறந்த நளை பிரான்சில் தனது இல்லத்தில் (93360 NEUILLY - ROOSEVELT) இன்று 22 ஆம் திகதி வியாழக்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா ஜேர்மனியில் வசிக்கும் மாமா, பெரியப்பாமார், அத்தைமார், மாமாமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் இலங்கையில் வசிக்கும் அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், அத்தைமார், மச்சான்மார், மச்சாள்மார், மம்மி, அக்காமார், அண்ணாமார் சகல செல்வங்களும் பெற்று சீரும் சிறப்பும் பெற்று நலமுடன் வாழ மானிப்பாய் மருதடி விநாயகரை வேண்டுகின்றனர்.

அண்ணாமார்:

விநோதன், தீவன், நிரோசன்.

''அருள் அருவி''

உடுவில் வடக்கு,

சுன்னாகம்.

(சி/762)


# இந்தியக் கட்டடப் பொருள்கள் அடுத்த மாதம் காங்கேசன் வரும்

## வீடுகளைப் புனரமைக்க பகிர்ந்தளிக்கப்படும்

கொழும்பு, மே 22

வடபகுதி புனரமைப்புக்கென இந்திய அரசு வழங்கியுள்ள ஒரு தொகுதி கட்டடப் பொருள்கள் இந்தியாவில் இருந்து அடுத்த மாதம் நேரடியாகக் காங்கேசன் துறைக்கு கப்பல் மூலம் எடுத்துவரப்படவுள்ளன.

மூவாயிரத்து 900 தொன் சிமெந்து 657 தொன் அஸ்பெஸ்டஸ் கூரைத் தகடுகள் ஆகியனவே இந்தியாவில் இருந்து வரவிருக்கின்றன.

இந்தப் பொருள்கள் குடாநாட்டில் பெரிதும் பாதிக்கப்பட்ட 5 ஆயிரத்து 200 குடும்பங்களுக்கு வழங்கப்படவிருக்கின்றன.

ஒரு குடும்பத்துக்கு 15 பக்கெட் சிமெந்து, 20 கூரைத் தகடுகள் என்ற வீதத்தில் இவை வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் செப்டம்பர் மாதத்தில் மழைகாலம் ஆரம்பிக்க முன்பாக வீடுகள் திருத்தவே இந்த உதவியை இந்தியா வழங்குகிறது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-150)

## புலிகள் நடத்திய தாக்குதலில்:

# ராடர் நிலையம் சேதமடையவில்லை

## தீவுப் பகுதித் தளபதி தெரிவிப்பு

விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் அல்லைப்பிட்டி ராடர் நிலையத்துக்குச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

தீவுப்பகுதி இராணுவ பிரிகேட்டின் தளபதி கேணல் சுஸந்த மெண்டிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அல்லைப்பிட்டி நிலையத்தில் ஆறு ராடர் கருவிகள் அமைக்கப்பட்டிருப்பதாகவும் —

புலிகளின் தாக்குதலால் அவற்றுக்குச் சேதம் ஏற்படவில்லை; விடுதலைப் புலிகளின் இத்தாக்குதல் தற்போதைய இராணுவ நடவடிக்கையை பாதிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அல்லைப்பிட்டியில் அமைந்துள்ள இந்த ராடர் நிலையம் மீது கடந்த 14 ஆம் திகதி அதிகாலை புலிகள் நடத்திய தாக்குதலில் 5 படையினர் பலியானது தெரிந்ததே. (ஐ-3)

## நெடுங்கேணியில்...

(முதலாம் பக்கத் தொடர்)

மீது விடாது ஷெல் தாக்குதலை நடத்தியதாகவும் 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது.

இதேவேளை - வெசாக்கை ஒட்டி வன்னி படைநடவடிக்கை 24 மணிநேரத்துக்கு இடைநிறுத்தப்பட்டிருப்பதாகவும் 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது. (ஐ-164)

## வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்)

எதிர்பார்த்த வெற்றியை அரசுப் படைகள் எட்டவில்லை என்றும் —

எதிர்பார்த்ததை விட கூடுதல் இழப்புக்கள் ஏற்பட்டன என்றும் —

இதன் காரணமாக இந்தப் படை நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும்—

கொழும்புப் பத்திரிகைத் தகவல்கள் தெரிவித்தன.

அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கை புதிய உத்வேகத்துடன் மேற்கொள்ளப்படும் என்றும் —

இதற்கான வியூகத்தை வகுக்கும் நடவடிக்கைகளில் இராணுவத் தலைமை தற்போது மும்முரமாக ஈடுபட்டிருப்பதாகவும் —

படைவட்டாரங்களை மேற்கோள்காட்டி அப்பத்திரிகைத் தகவல்கள் மேலும் தெரிவித்தன. (உ-3)

## அனுநத்தவை...

(முதலாம் பக்கத் தொடர்)

கைது செய்யப்பட்ட சமயம் இவரிடம் 'செலூலர்' தொலைபேசி ஒன்று இருந்தது.

தான் வாங்கிய அரிசிப் பக்கெட் ஒன்றினுள் இருந்து அந்தத் தொலைபேசி தனக்குக் கிடைத்ததாக அந்த நபர் பொலீஸாரிடம் தெரிவித்துள்ளார்.

ஆனால் இத்தகைய தொலைபேசியை அரிசிப் பைக்கட் ஒன்றினுள் வைக்க முடியாது என்றும் —

எனவே இவரது கூற்றை நம்பமுடியாது என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

தான் அனுராதபுரத்தில் இருந்து கண்டிக்கு வந்ததாக அந்த நபர் கூறியதை அடுத்து அவரைப் பற்றி விசாரிக்க விசேட பொலீஸ் குழு ஒன்று அனுராதபுரம் சென்றுள்ளது.

அந்த நபரிடம் இருந்து கைப்பற்றிய 'செலூலர்' தொலைபேசியின் உரிமையாளரைப் பொலீஸார் தேடி வருகின்றனர்.

விடுதலைப் புலிகளிடம் இருந்து பணம் பெற்று அவர்களுக்காக தகவல் சேகரிக்கும் பணியில் இவர் ஈடுபட்டிருக்கலாம் எனப் பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

பிச்சைக்காரர் வேடத்தில் காணப்பட்ட இவரிடம் 'செலூலர்' தொலைபேசி இருப்பதைக் கண்ட பொது மக்கள் சிலர் கொடுத்த தகவலை அடுத்தே இவர் கைது

# கிழக்குப் பகுதிக்குத் தனியான பிரதிப் பொலீஸ்மா அதிபர்

## விரைவில் நியமிக்கப்படுவார்

கொழும்பு, மே 22

கிழக்கு மாகாணத்துக்கு தனியான பிரதிப் பொலீஸ்மா அதிபர் ஒருவர் நியமிக்கப்படவிருக்கிறார்.

இதற்காக 10 சிரேஷ்ட பொலீஸ் அதிபர்களின் பெயர்களை பொலீஸ்மா அதிபர் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பியுள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் முதல் கிழக்கு மாகாண பிரதிப் பொலீஸ்மா அதிபர் பதவி வெற்றிடமாக இருந்து வருகிறது.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, கந்தளாய் பொலீஸ் நிலையங்களை உள்ளடக்கியதாக கிழக்கு மாகாண பிரதிப் பொலீஸ்மா அதிபரின் பணி இருக்கும்.

80 ஆயிரத்து 500 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண்ட இந்தப் பிரதேசத்தில் 10 லட்சம் மக்கள் வாழ்கின்றனர்.

இங்கு 9 ஆயிரம் பொலீஸார் பணியாற்றுகின்றனர். இவர்களில் பெரும்பான்மையானவர்கள் றிசேர்வ் பொலீஸார் ஆவர். (ஐ-3-150)

## வரவேற்பு விழா

யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளராக பதவியேற்றுள்ள ரி. வி. கிருஷ்ணசாமிக்குக் கடந்த ஞாயிறன்று சாவகச்சேரி பிரதேச சபையினால் வரவேற்பு விழா ஒன்று நடத்தப்பட்டது.

பிரதேச சபை மண்டபத்தில் விசேட ஆணையாளர் பு. சுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த விழாவின் வரவேற்புரையை சபைச் செயலாளர் ஐ. வைரமுத்து நிகழ்த்தினார்.

இவ் வைபவத்தில் யாழ் மாவட்ட உள்ளூராட்சி மன்ற சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் ப. பரம்சோதி, சபை பிரதம எழுதுநர் த. அருணந்தி ஆகியோர் உரையாற்றினர்.

கைதடி உப அலுவலகப் பொறுப்பதிகாரி மா சிவராசா நன்றியுரை நிகழ்த்தினார். (இ-117)

## கண்டியில் தேடுதல்

கண்டி நகரில் உள்ள வீடுகள், வர்த்தக நிலையங்கள் என்பனவற்றில் கடந்த இரு நாள்களாகப் பொலீஸார் திடீர் சோதனைகளை மேற்கொண்டனர்.

பொலீஸ் நிலையத்தில் பதிவு செய்யாமல் எவராவது வெளியாட்கள் தங்கியுள்ளனரா என்பது குறித்து பொலீஸார் விசாரித்தனர்.

## கொலைக் களத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

களைச் சந்திக்கவும் இராணுவம் தயாராக உள்ளது.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் — திஸ்ஸ ஜெயதுங்க பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

இதுபோன்ற பெரிய படை நடவடிக்கைகளில் ஆட்சேதம் எதிர்பார்க்கப்படவேண்டிய ஒன்றே ஆகும். ஆயினும் படையினர் தரப்பில் குறிப்பிடும்படியான அதிகளவு சேதம் ஏற்படவில்லை; எனினும் இன்னமும் புலிகளின் பிடிக்குள் இருக்கும் பெரும் பகுதியான வட வன்னிப் பகுதிக்குள் படையினர் ஆழமாக ஊடுருவிச் செல்லும்போது மேலதிகமாகப் பெரும் மோதல்கள் ஏற்படும் — என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை —

தற்போதைய படை நடவடிக்கையில் தமது தரப்பில் இதுவரை 67 படையினர் உயிரிழந்ததாகவும், 99 படையினர் காயமடைந்ததாகவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் தரப்பில் 181 பேர் கொல்லப்பட்டும் 316 பேர் காயமடைந்தும் உள்ளனர் என்றும் அவர் சொன்னார்.

தற்போதைய படை நடவடிக்கையில் உயிரிழந்த மற்றும் காயமடைந்த படையினரின் எண்ணிக்கை இதைவிட அதிகம் என்று ஆஸ்பத்திரி வட்டாரங்களையும், யுத்த ஆய்வாளர்களையும் மேற்கோள்காட்டி 'ரொய்ட்டர்' செய்தி நிறுவனம் தெரிவித்தது.

இதேவேளை — தமது தரப்பு இழப்புகளை அரசு மிகைப்படுத்திப் பிரசாரம் செய்து வருவதாக விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இதுவரை நடந்த மோதல்களில் தமது தரப்பில் 60 பேரே உயிரிழந்ததாகக் கூறி அவர்களது பெயர் விவரங்களைப் புலிகள் வெளியிட்டுள்ளனர்.

(ஐ-உ-21-164)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22-05-1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org